# சத்திய வேத பாதுகாவலன்

1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Tele{grams: "CATHOLIC PRESS", JAFFNA.
Tele{phone: No. 100.

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

81-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1956-ம் ஆண்டு மாசி மாதம் 23-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 8-ம் இலக்கம்


## POPE'S DAY—1956

**Notice to the Clergy and Faithful**

His Lordship the Bishop will be much pleased if the Priests, Religious and all Faithful of the Diocese of Jaffna will join wholeheartedly in the Crusade of prayer for the Holy Father the Pope on the occasion of His 80th Birthday and the 17th anniversary of His Election. (2nd March). To give full effect to this Crusade, all are invited to contribute generally [generously] to a Spiritual Bouquet which will be forwarded to His Holiness. Contributions to this Spiritual Bouquet are to be forwarded before the 4th March, to Rev. Fr. Secretary, Bishop's House, Jaffna.

Parish Priests, Heads of Schools and Teachers are requested to do their best to further this request.

generously

## பாப்பரசர் சுபதினம் 1956

குருப்பிரசாதிகளுக்கும், விசுவாசிகளுக்கும்

### அறிவித்தல்

தமது 80-வது பிறந்தபெருநாளையும், தாம் பாப்பானவராகத் தெரியப்பெற்ற 17-வது வருட நிறைவு விழாவையும் கொண்டாடும் சுபசந்தர்ப்பத்திலே பரிசுத்தபிதாவாகிய பாப்பரசருக்கான செபப்படையணியில் யாழ்ப்பாண மேற்றிராசனத்தைச்சேர்ந்த வண. குருப்பிரசாதிகளும், சங். சந்நியாசர்கள், கன்னியாஸ்திரிமாரும், விசுவாசிகள் அனைவரும் மனப்பூர்வமாகச் சேர்ந்துகொள்ளுமிடத்து நம்மேற்றிராணியாண்டவர் அவர்கள் பெரிதும் உவகை எய்துவார். இந்தச் செபப்படையணி பூர்த்தியாக நடைபெறத்தக்கதாய், பரிசுத்த பிதாவுக்கு அனுப்பிவைக்கப் படவிருக்கின்ற ஞானப்பூச்செண்டுக்கு மனத்தாராளமாய்ப்பங்குத்தானம் செய்யுமாறு சகலரும் அழைக்கப்படுகின்றார்கள். இந்தஞானப் பூச்செண்டுக்குச்செய்யப்படும் பங்குத்தானங்கள் பங்குனி மாதம் 4-ந் திகதிக்குமுன் வண. காரியதரிசி சுவாமியார், மேற்றிராசனமாளிகை, யாழ்ப்பாணம், என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டியனவாகும்.

விசாரணைப்பங்குகளின் குருமாரும், கலாசாலைகளின் தலைவர்களும், ஆசிரியர்களும் இந்தவேண்டுகோளுக்குத் தங்களாலானதைக் கூடிய மட்டும் செய்யும்படியாகக் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

## சுதேச வர்த்தமானம்

### யாழ்ப்பாணச் சுப்பிறீங்கோடு

ஆண்டிலே முதலாம்முறையாக நடைபெறும் யாழ்ப்பாணச் சுப்பிறீங்கோடு நிகழும்மாசிமாதம் 27-ந் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாண நகரமண்டபத்தில் ஆரம்பமாகி நடந்தேறும். அதிலே இம்முறை விசாரணைக்கிருக்கும் வழக்குகள் 22. இவற்றிலே கொலை வழக்குகள் 14.

### கார், ரையர் தொழிற்சாலை

நிதிமந்திரியாரான திரு. எம். டி. எச். ஜயவர்த்தன அவர்கள் பாதுகையிலே சென்ற 14-ந்திகதி நடைபெற்ற ஓர்பொதுக்கூட்டத்துக்குத் தலைமை வகித்துப் பேசியபோது: கார்கள், ரையர்கள் உற்பத்திசெய்வதற்கான தொழிற்சாலையொன்று இலங்கையிலே விரைவில் திறக்கப்படுமெனத் தெரிவித்திருக்கின்றார்.

### பிரதிநிதிகள்சபை உபதலைவர்

பாராளுமன்றத்திலே சனப்பிரதிநிதிகள்சபையில் புத்தளப் பிரதிநிதியாயும், அச்சபையின் உபசபாநாயகராயும் இருந்துவந்தவரான ஜனாப் எச். எஸ். இஸ்மாயில்அவர்கள் அரசியலிலிருந்து விலகியிருக்கின்றார். அதனால் தாம் அடுத்தபொதுத்தேர்தலில் புத்தளஸ்தானத்துக்குப் போட்டியிடுவதில்லையெனத் தெரிவித்திருக்கின்றார்.

### அதிவிருத்தாப்பிய முஸ்லீம்

பசறையிலே 122 வயதுடையவரென்று மதிக்கப்பட்டுவந்தவரான அபிபுல்லாகான் பாய்என்பவர் சென்ற 10-ந் திகதி வெள்ளிக்கிழமை காலஞ்செல்லலாயினார். இவர் தனது 10-ம்வயதிலே ஏழுவயதுடைய ஓர்சிறுமியுடன் பம்பாயிலிருந்து இலங்கைக்குவந்ததாகச் சொல்லப்படுகிறது. இவர் பிந்தஅவளையே விவாகஞ்செய்துகொண்டார். இவர் தனது 50-ம்வயதிலே பசறைக்குச்சென்று அங்குவசிக்கலாயினர். இதுவரை இவர் கடினநோய்கண்டு வருந்தியதேகிடையாதாம். தற்போது 118 வயதுடையவளான இவர்மனைவி இப்போதும் நல்லஆரோக்கியமாயும், சந்தோஷமாயும் சீவித்துவருகின்றாள். இவருக்குப் பேரப்பிள்ளைகளும், பீட்டப்பிள்ளைகளுமாக 100 பேர்வரையில் இருக்கின்றார்கள். இவரின் இளையமகனான அப்துல்லாகானுக்குத் தற்போது வயது 22.

### றெயில்வே நேரஅட்டவணை

றெயில்வேப் பிரயாண புதியநேர அட்டவணை நிகழும் மாசிமாதமுடிவிலே பொதுமக்களுக்குக் கிடைக்கக் கூடியதாய் இருக்குமென்று றெயில்வே ஜெனறல்மனேஜர் திரு. பி. டி. ரம்பால அறிவித்திருக்கின்றார். யாழ்ப்பாணத்துக்கும், காங்கேசன்துறைக்குமிடையே றெயின்கள் தரித்துச்செல்லும் அநேக இடங்களில் பிளாற்போம்கள் றெயில்வேப்பகுதியால் அமைக்கப்படுமென்றும் அவர்தெரிவித்திருக்கின்றார்.

### அன்னை இராணியாரின் விஜயம்

மாட்சிமைதங்கிய எலிசபெத் மகாராணியாரின் மாதாவான எலிசபெத் இராணியார் கொழும்புத்திட்ட பொருட்காட்சியைத் திறந்துவைப்பதற்காக அடுத்தவருடம் இலங்கைக்குவரவிருக்கின்றார். அவ்வருடத்தின் வசந்தகால ஆரம்பத்திலே இலங்கைக்கு விஜயஞ்செய்யுமாறு அரசாங்கம் விடுத்த அழைப்பைஏற்றே கொழும்புத்திட்டப் பொருட்காட்சியைத் திறந்துவைக்கவும், அதன்மேல் ஏறக்குறைய மூன்றுவாரங்கள் இங்குசெலவிடவும் அவர் சம்மதித்திருக்கின்றார்.

### நகரசபை உதவிமேயர்

யாழ்ப்பாண நகரசபையின் விசேஷ கூட்டம்ஒன்று கம்மிஷனர் திரு. ஏ. வி. சின்னையா அவர்கள் தலைமையில் சென்றபுதன்கிழமைகூடியது. அதிலே நகரசபையின் புதிய உதவிமேயராகக் ஹாஜி வி. எம். எம். அபூசாலி அவர்கள் ஏகமனதாகத் தெரியப்பெற்றிருக்கின்றார். இவரின்பெயரைத் திரு. ஈ. கே. என். செல்வத்துரை பிரேரேபிக்க, திரு. ஜே. எஸ். நிக்கலஸ் அனுவதித்தார். சென்றவருடம் யாழ்ப்பாண நகரசபையின் மேயராயிருந்தவர் ஓர் முஸ்லீம்மகனான குவாஸி எம். எம். சுல்தான் அவர்களே.

### பாஷைகற்கும் உத்தியோகஸ்தர்கள்

மட்டக்களப்புக் கச்சேரியிலே கடமைபார்க்கும் உத்தியோகஸ்தர்களுக்கென்று தமிழ்–சிங்களவகுப்புகள் அங்கு கச்சேரிவளவிலுள்ள தற்காலிக கட்டடங்களில் நடத்தப்பட்டு வருகின்றன. 25 உத்தியோகஸ்தர்களைக் கொண்ட கூட்டங்கள் காலை 9 மணிமுதல் 10 மணிவரையும், பிற்பகல் 3 மணிமுதல் 4 மணிவரையும் நடைபெறுகின்ற இந்தவகுப்புகளுக்குச் சமுகமளிக்கின்றன. மட்டக்களப்புக்கச்சேரியிலே தமிழ்–சிங்கள துவிபாஷிகர்களாய் இருந்துவருகின்ற திரு. சோமசுந்தரம், திரு. ஹரிச்சந்திரா ஆகிய இருவரும் முறையே தமிழ்–சிங்கள வகுப்புகளுக்குத் தலைமைவகித்திருப்பதாகத் தெரியவருகிறது.

### ஏக்கருக்கு 137 புசல்நெல்

இலங்கையின் மேற்குப்பகுதிக்கெனச் சென்றவருடம் நடத்தப்பட்ட நெற்செய்கைப் போட்டியிலே குருநாகற்பிரிவைச்சேர்ந்த தெலாலந்தைத் தோட்டத்தின் சுப்பிறின்ரெண்டனை திரு. பி. எம். பீரிஸ் அப்புகாமி என்பவர் முதலாவதுபரிசில் பெற்றிருக்கின்றார். இவர் ஜப்பானியமுறையைமேற்கொண்டு நெற்செய்கைநடத்தியதன் பயனாக ஏக்கர்ஒன்றுக்கு 137 புசல் நெல் விளைந்திருக்கிறது.

### தைமாதமும் கொலைகளும்

இலங்கையிலே பொலிசார் குற்றத்தடைப் போராட்டம் ஒன்றை மும்முரமாக நடத்திவந்தபோதிலும் நாளொன்றுக்கு ஒருகொலையாவது நடவாதநாள் இல்லையெனலாம். அவ்வாறு சேமமே முதலென் வீதிப்பாதுகாப்பு இயக்கம் நடைபெற்றுவந்தபோதிலும் வீதிவிபத்துகளும் குறைவனவாயில்லை. இலங்கையிலே சென்ற தைமாதத்தில் 35 கொலைகளும், 20 வீதிவிபத்து மரணங்களும், நிகழும் மாசிமாதத்தின் முதல் 15 தினங்களிலும் 15 கொலைகளும், 11 வீதிவிபத்து மரணங்களும் நேர்ந்திருக்கின்றன.

### ஆகாயப்பிரயாண சேவை

கொழும்புக்கும், சென்னைக்குமிடையே "ஏயர் சிலோன்" பிரயாண சேவையில் ஈடுபட்டிருந்த டகோட்டா ஆகாயவிமானங்களில்ஒன்று பழுது பார்க்கும் பரிசோதனைக்காக இந்தியாவுக்கு அனுப்பப்பட்டிருப்பதால் இம்மாதம் 15-ந்திகதி தொடக்கம் ஆகாயப்பிரயாணசேவை பின் வருமாறு நடைபெற்றுவருகிறது. ஆகாயவிமானம் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் (பலாலி) வந்து சேரும்நேரம் காலை 7-55 மணி — யாழ்ப்பாணத்திலிருந்து சென்னைக்குப் புறப்படும்நேரம் காலை 8-30 மணி — சென்னையிலிருந்து யாழ்ப்பாணம்வந்து சேரும்நேரம் மத்தியானம் 12மணி — யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குப் புறப்படும்நேரம் பிற்பகல் 1-15மணி. வாரந்தோறும் திங்கள், புதன், வெள்ளி, சனிஆகும் நான்கு நாட்களிலும் மாத்திரமே யாழ்ப்பாணத்திற்கும் திருச்சிக்குமிடையில் பிரயாணசேவை நடைபெறுகின்றது. இந்தநான்குதினங்களிலும் ஆகாயவிமானம் பிற்பகல் 4-15 மணிக்குப்புறப்பட்டு, பிற்பகல் 6-30 மணிக்கு மறுபடியும்வந்துசேரும். இந்தநான்கு தினங்களிலும் கொழும்புக்கு அதிகப்படியான பிரயாணசேவை நடந்துவருகிறது. இந்தவிமானம் யாழ்ப்பாணத்திலிருந்துமாலை 7-05மணிக்குக் கொழும்புக்குப் புறப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்ச். லோயலா இஞ்ஞாசியாரின் நான்காம் நூற்றுண்டுவைபவம்

(முன்தொடர்ச்சி)

அலைகளை வாசித்துக்கொண்டிருக்கும்போதுதான், தேவவரப்பிரசாதஒளியின் பிரபைக்கிருபையால் அவரது ஞானக்கண்கள் திறந்தன. பிரபஞ்ச சம்பிரதாயபெருமைகளின் வீண்தனம் அவர் மனக்கண்ணிற் தைத்தது. இப்பிரபஞ்சமாகிய யுத்தகளரியில் இயற்றும் அசகாய சூரவீரத்தனம்யாவும் எம்திருமீட்பரும், தபோதன சாதுக்களும்ஆற்றிய அருஞ்சேவை, செயல்களோடு இணையிடத்தக்கனவா? அந்த சாதுக்களின் பாவனையாகத் தாமும் கிறீஸ்துநாதரின் சுசீலங்களைப் பயில வேண்டும்என்ற திடிதிடித்த ஓர் பேரவா அர்ச். இஞ்ஞாசியாரைப் பட்சிக்கத்தொடங்கிற்று. ஆனால், வரப்பிரசாதத்தின்வேலை அத்தனை இலகுவாக வாகைமாலை சூடவில்லை. இஞ்ஞாசியாரின் மனமாற்றம் என்னத்திற்போய் முடியுமென்பது சாத்தானுக்கு வெட்ட வெளிச்சமான காட்சியாயிற்று. அவரின் மனப்புலத்தில் வகைமோசமான மல்யுத்தமொன்றை மும்முரமாய்க் கிளப்பியது பசாசு. பரமதேவதாயார் பாலகயேசுவை ஒக்கலையில் ஏந்தியவண்ணம் இஞ்ஞாசியாருக்குத் தோன்றிய போதுதான் அவரது மற்போருக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டதாம். எமது பரமமாதாவைக் கண்ணுற்றதும் "தேனின் இனிமையைவென்ற இனமறியாத ஓர் இனிமையைச் சுவைத்துச் சுகித்தனராம். ஈற்றில் அச்சுவை நின்றுவிட்டபோது, அவரது பழைய பாவங்கள்பேரிற் பகரொணு அருவருப்பு மேலாடிநின்றது."

குருவரிசையிற்சேர்ந்து பதவிஏற்றுத் தெய்வமன்னரின் சேவகனாய் வாணாள் எல்லாம் பணிசெய்யத் தம்மைஅர்ப்பணஞ்செய்து, அக்கணமேஅதற்குத்திட்டம்போட்டார். இத்திட்டத்தை நடைமுறையில் ஆரம்பித்தார். அர்ச். ஆசீர்வாதப்பர் தவமடத் தேவாலயமிருந்த மொண்செருத் எனும் தலபீடத்திற் தமதுஉடைவாளைத் தொங்கவிட்டார். கடந்துபோன சீவிய நடக்கையாவையும் பரிசோதித்தார். முழுவாழ்வையும் தழுவிய ஓர்பொதுப் பாவசங்கீர்த்தன மூலம் புனிதமாகினர். தொடர்ந்தாற்போலப் பதினொருமாதங்களாய் மன்ரேசாகெபியினுள் மறைந்திறைந்து செபமும், தவமுமேகதியெனக் காலங்கழித்தார். அங்கு தாம்கண்டுதெளிந்த ஞானார்த்த அனுபவசித்தாந்த துணிபுகளை எழுத்தில்வைத்தார். இக்குறிப்பீடுகள்தாம் பின்னர்க்காலம் புதுக்கிப் பெருக்கப்பட்டு, "இஞ்ஞாசியார் ஞானத்தியானங்கள்" எனுமநாமம் புனைந்து அருமையான புத்தகமாய் அனைவர்க்கும் அனுகூலமான நிலவெனக்காலித்து வளர்பிறைபோல்வளர்ந்து வருகின்றது.

ஆன்மதத்துவங்களின் தயாரிப்புத் தீர்க்கமாக முற்றுப்பெற்றவுடனே தமதுகுருத்துவ உத்தியோகத்துக்கு அகத்தியமான புத்தியின் சக்திகளை விருத்தியாக்குவதிற் தீவிரமாய் உழைக்கத்தொடங்கினர். தாம் 33 பிராயம் முற்றிய முழுமனிதனுயிருந்தும் இளம் பாலியமாணவரின் பக்கத்தில்அமர்ந்து லத்தீனில் ஆரம்பபாடங்களைப் பயில முனைந்தனர். அருமையான தாழ்ந்த தாழ்மையோடு இரண்டுவருடம் விடாப்பிடியாகக் கலைபயின்று தத்துவசாஸ்திரங்கற்கத் தகுதிவாய்ந்தவரெனத் தெரிவுசெய்யப்பெற்றனர். பரீஸ்நகரின் பல்கலைக்கழகத்தில் இக்கலையைச் சித்தியுடன் முடித்தபின் வேதசாஸ்திரங்கற்க முற்பட்டார்.

சர்வகலாசாலையிற் சஞ்சரித்தகாலை தம்உடன்மாணவரில் அறுவரைத் தம்முடன்சேர்த்துத் தமதுநோக்கத்தை ஆதரிக்கவும், சபைஅங்கத்தினராகவும் செய்தார். தேவஊழியத்துக்குத் தேவையான உளப்பலமும், புத்திதீட்சணியமும் அமைந்திருந்ததை அறிந்தே அவர்களை அங்கீகரித்தார். அன்னோரில்ஒருவரே பின்னர் சிந்துதேசத்தின் அப்போஸ்தலராக அருப்பாடுபட்ட அர்ச். பிரான்சீஸ் சவேரியார். அறத்தீர்க்கமான கருமயூகசாதுரியத்துடன் அவர்களின் உலகபுத்திப்போக்கைப் பற்றறக்களைந்து, தமயிற்பற்றியெரிந்த ஞானவேகம் அவர்களையும பற்றிப்பட்சிக்க வகைசெய்தார். அதிமிக தேவதோத்திரவாஞ்சையும், ஆத்துமாக்களை இரட்சிக்கும்ஆத்திரமும் அவர்களிலும் ஆவேசமாயின. ஒருநாள் அதிகாலை இஞ்ஞாசியாரும், அவரது சகஅங்கத்தினரும் மௌனயோகச் சாதனையில் ஆழ்ந்தவராய்ச் சந்தியோனிசியார் சிற்றாலயத்துள் நடந்தனர். அவர்கள்எழுவருள்ளும் குருபதவிவகித்த ஓரேயொருவரான பீற்றர்வேபர்சுவாமியார்திவ்விய பூசைப்பலி நிறைவேற்றினர். நன்மைவாங்குஞ்சமயம் அடுத்தபோது திவ்விய சற்பிரசாதத்தைக் கையில்ஏந்தியவண்ணம் அவர் மற்றவர்களைநோக்கித் திரும்பினர். எல்லோரும் தத்தம்வாக்குத்தத்தங்களை அறுதிஉறுதியாக உச்சாரணஞ்செய்தனர். இந்தத் தாராள கிருத்தியத்தின்மேல் யேசுசபையும் முளைத்தெழும்பியது. இதுநிகழ்ந்தது 1534-ம்ஆண்டு ஆவணிமாதம் 15-ந் திகதியன்று. தேவதாயார் பரலோகத்துக்கு ஆரோபணமான திருவிழாவின் தினமது. இச்சரித்திரசம்பவம் நிகழ்ந்த சிறிதுகாலத்துள் இஞ்ஞாசியாரும், மற்றஜவரும் குருப்பட்டம்பெற்றுக்கொண்டனர். 1540-ம் ஆண்டு புரட்டாசி மாசம் 27-ந்திகதி மூன்றுவதுபாவுலு எனும் பாப்பானவர் யேசுசபையின் சட்டப்பிரமாணங்களை அங்கீகரித்து ஆசீர்வதித்தருளினர். அர்ச். இஞ்ஞாசியாரே சபையின் ஆதிஅதிசிரேஷ்டராகத் தேர்ந்துகொள்ளப் படலானர்.

அவர் மீதிக்காலத்தின் அதிகப்பற்றனபகுதியை ரோமாபுரியிலே செலவாக்கினர். எனினும் பிதாவுக்குரிய கவலை கரிசனையோடு யேசுசபையைக் கண்காணித்து ஆட்சிசெய்துவந்தார். பரிசுத்தபாப்பானவரின் விருப்பிற்கிணங்கியும், திருச்சபையின் தேவைகட்கேற்றபடியும் அவைகொடியில்அகிலஉலகின் எந்தக்கோணத்துக்கும் பறந்துசென்று திடீர்த்தாக்கலாற் திகைக்க அடிக்கும் இடியேற்றுப் படையணியாகயேசுசபை தயாராயிருக்க வேண்டுமென்பதே இஞ்ஞாசியாரின் இலட்சியம். பதிதபோதனைகள் கிளைத்து மொய்த்து மூடாவண்ணம் அவற்றை வேரறுப்பதும், புத்திபோதகங்களாலும், ஞானத்தியான அப்பியாசங்களாலும் கிறீஸ்தவர்களின் விசுவாசத்தைவளர்த்துப் பலமாக்குவதுந் தான் இஞ்ஞாசியாரின் பிரதானகுறிக்கோளாய் என்றும்நிலையாக நின்றுவந்தது. இந்தஇலக்கை வைத்துக்கொண்டுதான் ஐரோப்பாமுழுவதிலும் ஆங்காங்கு கல்லூரிகளைநிறுவியும், ஞானத்தியானங்களிற் சனங்களுக்கு ஆர்வமெழுப்பியும், சாதாரணமக்களும், சற்குருக்களுமே அவற்றை ரசிக்கச்செய்தும் வந்தார். இஞ்ஞாசியாரின் மனதை அரித்துக்கொண்டிருந்த தேவதோத்திரஅவாவுக்கு இவைகள்போதுமெனத் தோற்றவில்லை. அவரது ஆவல் பூத்தவிழிகள் ஐரோப்பாவின் எல்லைகளுக்கப்பாலும் எறெடுத்துநோக்கின. யேசுக்கிறீஸ்துநாதரின் திருஇரத்தத்தையே ஈடுவைத்து மீண்ட கோடாகோடி ஆத்துமாக்களுக்கு இரட்சணியந்தரும் இதமானசெய்தி இன்னும் எட்டியபாடில்லையேஎன அங்கலாய்த்தனர். அருமந்ததோழனும், இதயத்திற்குகந்த விலைமதிக்கரிய நண்பனுமாகிய அர்ச். சவேரியாரையே தொலைதூரமான இந்தியாவுக்கு அனுப்பப் பின்வாங்கவில்லை. மெய்யைச்சொன்னால், உலகின் எந்தமூலையிலிருந்து தேவதோத்திரசேவை கூவிஅழைக்குமோ அங்கெல்லாம் தமதுசபையினரை அனுப்பச் சர்வதயாராயிருந்தார்.

## அனுபவ கைமருந்துகள்

5. இருமலுக்கு இலேசான கைகண்டமருந்து என்ன?

(1) சர்க்கரைசேர்த்து, நன்னாரிப் பாணிகாய்ச்சிக் குடிக்கலாம்.

(2) கற்கண்டுசேர்த்து, மிளகுபாணி காய்ச்சிக் குடிக்கலாம். அல்லது தூதுளை, கண்டங்கத்தரி, நன்னாரி இந்தமூன்றின்வேரும், அதிமதூரமும்சேர்த்து அவித்து, கற்கண்டுசேர்த்துக்குடிக்க எந்த இருமலென்றாலும் கையாலே பிடித்ததுபோல அந்தப்படியே நிற்கும்.

6. நெஞ்செரிவுக்கு என்னசெய்யலாம்?

(1) பனங்கட்டி தின்று வெந்நீர் குடிக்க நின்றுவிடும், அல்லது பேரீச்சம்பழந் தின்று பசுப்பால் குடிக்கலாம்.

7. சமியாக்குணத்தால் உண்டுபடும் "பூலிவாள்" என்ற வாந்திபேதிக்கு மருந்தென்ன?

(1) கறிமுருங்கையிலையும், உப்பும் அவித்துக்குடிக்க நிற்கும்.

(2) செத்தல் மிளகாயைக் கருக்கி ஒருகோத்துத் தண்ணீர்விட்டு எட்டில் ஒன்றாக வற்றினபின் குடிக்கலாம்.

(3) கொஞ்சச்சாராயத்தில் எலுமிச்சம்புளி கலந்துகுடிக்க உடனே சுகமாகும்.

8. அசீரணத்திற்கு என்னசெய்யலாம்?

(1) கறிமுருங்கையிலையும், உப்பும் அவித்துக்குடிக்க உடனே எரித்துப்போடும்.

(2) அடுப்புச்சாம்பலை ஊறவைத்துத் தெளித்து உப்புச்சேர்த்து அந்தநீரைக் குடிக்கலாம்.

9. மலம்போகாமல் இறுகிக்கொண்டால் என்னசெய்யலாம்?

(1) இரண்டுகரண்டி ஆமணக்கெண்ணெயில் எலுமிச்சம்புளிசேர்த்துக் குடிக்கலாம்.

(2) கடுக்காய், சூரத்தாவரை இரண்டுமசேர்த்து அவித்துக்குடிக்கலாம்.

(3) பனைப்பண்டங்கள், பழவகைகள் தின்னலாம்.

10. வயிற்றுக்கழிச்சலை எப்படி நிற்பாட்டலாம்?

(1) தேனும், எலுமிச்சம்புளியும் கலந்துகுடிக்க நிற்கும்.

(2) சுக்கைச்சுட்டு அரைத்துத் தேனிற் குழைத்துத் தின்னலாம்.

(3) கடுங்கோப்பி குடிக்கலாம்.

11. வயிற்றுளைவுக்கு நல்ல மருந்தென்ன?

(1) ஒரு ஆமணக்கெண்ணெய்ப் பேதி குடிக்கலாம்.

(2) நாவற்பட்டையை அவித்துத் தேன்கலந்து குடிக்கலாம்.

(3) காரைஇலையை எருமைமோரில் அவித்துக் கடைந்துதின்னலாம்.

12. கடுமையான வயிற்றுவலி வந்து தலைகுத்திக் காணம்போடுகிற ஆட்களுக்கு என்னசெய்யலாம்?

(1) அடுப்புச் சாம்பலைக் கொதிக்க வைத்துத் தெளித்துக் கறியுப்புச்சேர்த்துக் குடிக்க வலி தீரும்.

13. குடல்வாதம்வந்து அநேகர் சாகிறார்கள் அல்லவா? அதற்கு மருந்தென்ன?

(1) கறிமுருங்கைப் பட்டையை அரைத்து எலுமிச்சங்காய்ப் பிரமாணமெடுத்து அரைக்கால் கொத்து எலுமிச்சம்பழச்சாற்றில் நல்லாய்க்கலக்கிக் குடிக்க மாறிவிடும்.

14. நீர்க்கடுப்பு வந்துவிட்டால் அதற்கென்ன மருந்து?

(1) வயிறு கொள்ளுமட்டும் தண்ணீர் குடிக்கக் கொஞ்சநேரத்தில் சுகமாய்விடும்.

(2) நல்லெண்ணெயும், எலுமிச்சம்புளியும் கலந்துகுடிக்கலாம்.

(3) நன்னாரிவேர், தேற்றாக்கொட்டை, நற்சீரகம் மூன்றையும் அவித்துக் குடிக்கலாம்.

15. வயிற்றுப்பூச்சிக் கொடுமையை எப்படித் தொலைக்கலாம்?

(1) ஓடியல்மாவைத் தண்ணீரில் ஊறப்போட்டுத் தெளித்துக் குடிக்கலாம்.

(2) மாதுளைவேர், கிராம்பு, மிளகு மூன்றையும் அவித்துக்குடிக்கலாம்.

(3) தேங்காய்ச்சொட்டை நெல்லோடுசேர்த்து அவித்துத் தின்னலாம்.

(4) துவரம்பருப்பை அவித்துக் குடிக்கலாம்.

16. மூலத்திலே வருகிற முளைகளுக்கு என்னசெய்யலாம்?

(1) வேப்பம்வித்தின் பருப்பைப் பாக்குப்பிரமாணம் அரைத்தெடுத்துப் பில்லைசெய்து சற்றுச்சூடாக்கி மூலத்திலுள்ள முளையில்வைத்துக்கட்ட முளைவிழுந்து சுகமாகும்.

---

பிரித்தானியிலே கொலைக்குற்றத்திற்காக மரணதண்டனைவிதிப்பதை நிறுத்திவிடவேண்டுமென்று பிரித்தானியபாராளுமன்றம் சென்றவியாழக்கிழமை தீர்மானிக்கலாயிற்று. இத்தீர்மானத்திற்குச் சாதகமாகப் பாராளுமன்றஅங்கத்தவர்களில் 293 பேரும், பாதகமாக 263 பேரும் வாக்களித்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாதிரியாரும் பாரியாரும்

வடஆபிரிக்காவிலே யுத்த சேவை கண்டவரும், முன்னை நாள் அங்கிளிக்கன் சபைப் பாதிரியாருமான திரு. குளோட் சிங்கிளேயர் அவர்களும், அவர் பாரியாரும் மனந்திரும்பி டபிளின் நகரிலுள்ள ஆதாம்-ஏவாள் பிரான்சிஸ்கன் சபைக் கோவிலிலே சமீபத்தில் கத்தோலிக்க திருச்சபையில் சேர்ந்திருக்கின்றார்கள். திரு. குளோட் சிங்கிளேயர் அவர்கள் இற்றைக்கு 25 வருடங்களின் முன் றொசெஸ்றர் ஆசனக்கோவிலிலே அங்கிளிக்கன் சபைப் பாதிரியாராக அபிஷேகஞ் செய்யப்பெற்றார். பின்னர் ஈஸ்ற் கிறின்ஸ்ரெட் எனுமிடத்தில் கடமைபார்த்து வந்து, 1935-ம் ஆண்டு ஆஷ்பீல்ட்டின் தலைமைப்பாதிரியாராக நியமனஞ் செய்யப்பெற்றிருந்தார்.

## இரத்தக்கறைகள் படிந்த கோடி

நாகாசகிநகரைச்சேர்ந்த ஜப்பானியகத்தோலிக்கர் தங்களைத் துன்புறுத்தி வேதகலாபனை நடத்தியவர்களை எதிர்த்துக் கலகஞ்செய்யுமாறு "திவ்விய நற்கருணை ஸ்துதிக்கப்படுவதாக" எனும்மொழிகள் பொறிக்கப்பெற்ற கொடிஒன்றை உயர்த்திக்கொண்டு அப்போது ஓர்நாள் அணிவகுத்துப் பவனி சென்றார்கள். இந்தக் கொடி ஷிரோ அமுக்குசா எனும் 16 வயதுப்பையன் ஒருவனால் கொண்டு செல்லப்படலாயிற்று. அத்தருணம் ஷோகன் என்பவனின் படைகளால் உலாந்த பீரங்கிப்படையின் உதவியோடு அந்தக்கலகம் அடக்கப்பட்டபோது இந்தக்கொடியிலே அவனது இரத்தக்கறைகள் படியலாயின. அந்த இரத்தக்கறைகள்படிந்த இந்தக்கொடி அமெரிக்க றொக்பெல்லர் ஸ்தாபனத்துக்கு விற்கப்படுமிடத்து, அது தங்களைவிட்டுப் பிரிந்துவிடுமோ என்று நாகாசகிநகருக்குச் சமீபமான ஷிமாபறாபட்டினத்துமக்கள் அச்சமுற்றவர்களாய் ஆட்சேபிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். தற்போது இந்தக் கொடியை வைத்திருக்கின்ற ராக்கியோ ஒகாயாமா என்பவர் அதனைப் 13 லட்சம்ரூபாவுக்கு விற்றுவிடத் திட்டஞ்செய்துவருகிறார். இவர் அப்போதைய கலகத்தில் போராடிய கிறீஸ்துவவீரர்களிலே ஒருவரின் சந்ததியைச் சேர்ந்தவர். அதனை வைத்துப் பாதுகாப்பது கஷ்டமாயிருப்பதுபற்றியே இவர் அதனைவிற்க முன்வந்துள்ளார். றொக்பெல்லர் ஸ்தாபனமும் அதனை வாங்கி வத்திக்கானுக்குக்கொடுக்கவே திட்டஞ்செய்கின்றது. நாகாசகிக்கலகம் 1637-ம் ஆண்டு நிகழலாயிற்று. அப்போது வேதத்தைக்கைவிட மறுத்தவர்கள் ஊரினின்றும் துரத்தப்பட்டனர். திரும்ப அவர்கள் கைப்பற்றப்படுமிடத்து, ஷிமாபறா எனுமிடத்தில் உள்ள கொதிக்கும் வெந்நீர் ஊற்றுகளில்எறிந்தும், சித்திரவதைசெய்தும், சிலுவையில் அறைந்தும் கொல்லப்பட்டுவந்தார்கள்.

## மேற்றிராணியார் நீடூழிவாழ்க!

சீனவிலே ஷாங்காய்நகரின் கியுங்மேற்றிராணியார் சீனர்கள் தரிக்கும உள்ளுடைகள்மாத்திரமே அணிந்தவராய், கரங்கள்இரண்டும் முதுகின்பின்புறமாகக் கட்டப்பட்டவராய், தம்மேல் குற்றம்பாரித்த கம்யூனிஸ்தர்களாலே ஒன்றுகூட்டப்பெற்ற 4,000 கிறீஸ்துவ சனக்கூட்டத்தின்முன்பாக ஏற்கனவே பகிரங்க "வழக்குவிசாரணை"க்குள்ளாகிவிட்டார். அவர் தம்மேல் சுமத்தப்பட்ட முடிவில்லாத குற்றச்சாட்டுகளுக்குச் செவிசாய்க்கும்போது நிற்கும்படியே விடப்பட்டார். பின்னர் ஒலிபெருக்கி ஒன்றின்முன்பாகத் தள்ளிக்கொண்டுபோய் விடப்பட்டுத் "தமதுகுற்றங்களை ஒப்புக்கொள்"ளும்படியும், தலைகுனிந்து வெட்கித்துநிற்கும்படியும் ஆஞ்ஞாபிக்கப் பெற்றார். அவரின் ஒரேயொருபதில்

# கத்தோலிக்க சமாச்சாரம்

யாதெனில், "கிறீஸ்துஇராசா நீடூழிவாழ்க!" என்றுமும்முறை ஆர்ப்பரித்துக் கூறியதேயாகும். அதைக்கவனித்துநின்ற சனக்கூட்டமானது மேற்றிராணியாண்டவரின் வீரத்துவத்தால் வீராவேசமுற்றதாய், "எமது மேற்றிராணியார்நீடூழிவாழ்க!" என்று திரும்ப எதிரொலியாய்க் கூச்சலிட்டது. உடனே காவற்காரர் அவரைப்பிடித்துக் கரங்களைப்பிணித்து, தீவிரமாகமறுபடியும் சிறைச்சாலை கொண்டுபோய்ச்சேர்த்தனர். இவ்விதம் வழக்குவிசாரணை மேற்றிராணியாருக்கு வெற்றியாயிற்று. கம்யூனிஸ்தருக்குச் சோகந்தரும் படுதோல்வியாயிற்று.

## மரம்வெட்டிய குருவானவர்

லண்டன் நகரிலே இஸ்லிங்ரன் எனுமிடத்திலுள்ள போலிஷ் கோவிலின் விசாரணைக்குரவரான வண. என். ருறல்ஸ்கி சுவாமியார் சமீபத்திலே தமது குருத்துவ வெள்ளியூபிலியைக் கொண்டாடினார். மூந்த இவர் போலாந்தைச்சேர்ந்த பொமறுனியாவிலே தொண்டாற்றிவந்தார். யுத்தகாலத்தில் இவர் ருஷியர்களின் கையிற்சிக்கவே, அவர்கள்இவரை ருஷியாவின் ஊறல்மலைகளுக்குப் பின்னுள்ள மு[illegible] ஒன்றுக்கு அனுப்பிவைத்தார்கள். அங்கே இவர் மரம்வெட்டி வேலைசெய்ய வேண்டியவரானார். பின்னர் 1942-ம் ஆண்டு போலிஷ்படைகளுடன் ருஷியாவிலிருந்து வெளிகொண்டு இத்தாலிக்குச்சென்று அங்கு மொந்தே காஸினோவில் நிகழ்ந்த யுத்தத்தில் கலந்துகொள்ளலானார். 1950-ம் ஆண்டு முதல் இவர் லண்டன்நகரில் தொண்டாற்றிவந்திருக்கின்றார்.

## கம்யூனிஸ்தஆட்சியின் குரூரம்

போலிஷ் சிறைமுகாங்களிலே பலவந்தவேலைகள் செய்யுமாறு பலவந்தஞ் செய்யப்பட்டுள்ள சுமார் 1,000 கன்னியாஸ்திரிமார் போதியஉணவு கொடுபடாது பட்டினியால்வாடுகின்றனர். தங்களுக்குச் செய்யப்பட்டுவரும் கொடுமைகாரணமாக அநேகர் நோய்வாய்ப்பட்டுள்ளனர். ஆனல், போலாந்தின் கம்யூனிஸ்த கட்சியோ அவர்களை விடுதலையாக்குமாறு செய்யப்பட்ட முயற்சிகளைத் தடுத்துவிட்டதோடு, அவர்களை நல்லமாதிரியாக நடத்தவேண்டுமென்றுசெய்யப்பெற்றவேண்டுகோளுக்குச் சம்மதிக்கவும் மறுத்துவிட்டது. இந்தச்சிறைமுகாங்கள் பொஸ்னன், கிறக்கோ பகுதிகளில் இருந்துவருகின்றன. இந்தக்கன்னியாஸ்திரிமார் யுத்தம்முடிந்தபின் போலிஷ் கம்யூனிஸ்தர்களின் ஆதிக்கத்திலே ஜேர்மனியின் கிழக்குப்பகுதிகளில் அமைக்கப்பட்டிருந்த ஆஸ்பத்திரிகள் மற்றும் ஸ்தாபனங்களிலே ஓர்காலம் பணியாற்றிவந்தனர். இவர்களின் முகாங்கள் பொலிஸ் காவலில் இருந்துவருகின்றன.

## குருமாருக்காக வேண்டுகோள்

கம்யூனிஸத்தை எதிர்த்துப் போராடுவதிலே தனக்கு ஒத்தாசையாக 40,000 சாதாரண கத்தோலிக்கரையும், ஏறக்குறைய 2,000 குருமாரையும் அனுப்பிவைக்குமாறு பிறேசில் நாடு ஐக்கிய அமெரிக்கதேசத்தைக் கேட்டிருக்கின்றது. கத்தோலிக்க அபிப்பிராயத்தைப் பரப்புதற்கென அந்நாட்டில் இருந்துவருகின்ற சம்பாவிலு ஸ்தாபனம் இந்தவிண்ணப்பத்தைச்செய்து, பெரும்பான்மையானபகுதிகளிலே குருமார் மிக அருந்தலாய்—அதாவது, 3,656 கத்தோலிக்கருக்கு ஒரேயொரு குருவானவர்வீதமும், சிலபகுதிகளில் 25,000கத்தோலிக்கருக்கு ஒரேயொரு குருவானவர்வீதமும் இருப்பதாக எடுத்துக்கூறியிருக்கிறது. ஆனல், ஐக்கிய அமெரிக்க தேசத்திலே ஒவ்வோர் 7[illegible] ஒருகுருவான[illegible] கின்றார். பி[illegible] நாற்பதினாயிரம் பட்ட[illegible] கிராமங்களில் நிரந்தரமான குருவானவர் கிடையாது. தலைப்பட்டணமான றியோ டி ஜனேய்ரோநகர் அதிமேற்றிராசனம்மாத்திரம் ஆயிரம் கத்தோலிக்கருக்கு ஒரு குருவானவர்வீதம் கிடைக்கத்தக்கதாய் 2,000 குருமாரை வேண்டிநிற்கின்றது. அனுப்பிவைக்கப்படுமாறு கேட்கப்பெற்றுள்ள 40,000 சாதாரணகத்தோலிக்கரும் அங்கு வானொலிநிலையம், தூரக்காட்சி நிலையம், வீதிப்போதகம், தொழிலாளர் அப்போஸ்தலத்துவம் ஆதியாம் துறைகளில் ஈடுபடுவார்கள்.

## இராசதுரோகமான செயலாம்

கம்யூனிஸ்த ஆதிக்கத்திலுள்ள யூகோசிலேவியாவிலே பரிசுத்த பாப்பரசரின் 80-வது பிறந்த பெருநாளை—பங்குனி 2-ந் திகதி — பகிரங்கமாகக் கொண்டாடுவதுஓர் "இராசதுரோகச்செயல்"ாகக் கருதப்படுமென்று அந்நாட்டின் சர்வாதிகாரியான ரிற்றோவின் அரசியற்பொலிசார் மேற்றிராணிமாருக்கும், குருமாருக்கும் அறிவித்திருக்கின்றனர். சாகிறெப், லுஜுப்ளிஜானா எனும்பகுதிகளில் பாப்பரசர்பேரால் யாதும்கொண்டாட்டங்கள் நடைபெறுகிறதாயிருந்தால், அவற்றைஎதிர்த்துப் போட்டியாகப் பங்குனிமாதம் 1-ம், 2-ம் திகதிகளில் மகாநாடுகள், அன்றேல் சமூகசம்பந்தமான பெருங்கூட்டங்கள் நடத்த வேண்டுமென்று அப்பகுதிகளிலுள்ள கம்யூனிஸ்த கிளைச்சபைகளுக்கெல்லாம் கட்டளை பிறந்திருக்கிறது. அந்நாட்களில் கோவில்களுக்குவெளியே நடந்தேறும் எத்தலைய கத்தோலிக்ககூட்டங்களையும் கலைத்துவிடுவதற்கும் அவற்றிற்கு அனுமதிவழங்கப் பட்டிருக்கிறது. கத்தோலிக்கமக்களை மிகப்பெரும் பான்மையினராகக் கொண்ட சிலோவீனிய மாகாணத்திலே பாப்பரசரின் பிறந்த பெருநாளைப் பகிரங்கமாகக் கொண்டாடுவதற்குக் குருமாரும், சாதாரண கத்தோலிக்கரும் செய்துகொண்ட விண்ணப்பங்களை அரசாங்கம் நிராகரித்துவிட்டது. பாப்பரசரின் பிறந்த பெருநாளைமுன்னிட்டு யாதாமோர்பிரசாரமும் செய்யாதிருக்குமாறு அநேக குருமாரைப் பொலிசார் எச்சரித்திருக்கின்றார்கள்.

மகிழ்ச்சி பொங்கும் சிரிப்புக்கு ஊற்று மகிழ்ச்சிநிறைந்த இருதயந் தான். கருணையில்லாவிட்டால் உண்மையான மகிழ்ச்சி இருக்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...ம த மிஞ்சிய ...றும் சுகபோகங் ...கள் தவிர்க்கும்படியாக ...ண்டிக்கொள்வது.

மிஷன்கருத்து: வியெற்நாம் நாட்டின் திருச்சபைக்காக மன்ருடிக்கொள்வது.

சத்தியவேத
பாதுகாவலன்

1956-ம் ஆண்டு
மாசி மாதம் 23-ந் திகதி

## தமிழரின் வருங்காலம்

களனியிலே ஐக்கியதேசீயக் கட்சியின் எட்டாவது வருடாந்த மகாநாடுகூடிக் கலைந்துவிட்டது. அதில் சிங்களத்தை மட்டுமே இலங்கையின் ஒரேயொரு அரசாங்கபாஷையாக்க வேண்டுமென்று பாராளுமன்றத்தில் பாணந்துறைப் பிரதிநிதியான திரு. டி. சி. டபிள்யு. கன்னங்கரா என்பார் அருந்தவமிருந்து கொண்டுவந்த அந்தப்பிரேரணை ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டமை ஓர் அதிசயமன்று. பிரதமர் சேர் ஜோண் கொத்தலாவல அவர்கள் தமது தலைமைப் பேருரையில் "சிங்களம்மட்டும்" என்ற பிரேரணையை ஏகமனதாகஎல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டமை ஓர் அதிசயமன்று. "சரித்திரபூர்வமான" இந்தப் பெரும்முடிவுசெய்யப்பட்டபோது, அம்மகாநாட்டில் கலந்துகொண்டவர்கள் கரகோஷஞ்செய்தும், கரங்களைஉயர்த்தியும் அப்பிரேரணைக்கு ஆதரவளித்தமை ஆச்சரியமன்று. இந்த ஐ. தே. கட்சி மகாநாட்டில் தமிழ்ப்பிரதிநிதிகள் எவருமே கலந்துகொள்ளவில்லை. ஆனால், இந்தப்பிரேரணையை அங்கீகரிக்கப்படாதெனக்கேட்டுத் தமிழ்ப்பேசும் மக்கள்வசிக்கின்றபகுதிகளிலிருந்து அம்மகாநாட்டுக்குத் தந்திச் செய்திகள் போகாதிருக்கவில்லை. பிரதமர் தமது தலைமைப் பேருரையிலே "சிங்களத்தை அரசாங்கபாஷையாக்கவேண்டுமென்ற யோசனையை நாடு ஏற்றுக்கொள்ளுமிடத்து அதனைத் தாங்கள் எந்தவிதம் எதிர்ப்போமென்பதைத் தமிழ்த் தலைவர்கள்பலரும், பிறரும் என்னிடம் தெரிவித்தார்கள்; பொதுத் தேர்தலிலே மக்கள் தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவித்த பிறகு எமதுநாட்டைப் பிளவுபடுத்தி எம்முடைய அரசியல் திட்டத்தை நாசமாக்கமுயலும் துரோகிகள்மீது இராசதுரோக குற்றச்சட்டத்தின்கீழ் பிரதமர் நடவடிக்கைஎடுப்பார்" என்று அவர்கூறியமை அவர்கள் செவிக்கேருதிருக்கும்போல் இல்லை. "இலங்கையை இருகூருகப் பிளக்கும்முயற்சியை எதிர்த்து முறியடிப்பதிலே ஐ. தே. கட்சியினர் மட்டுமன்றிப் பிறஅரசியற்கட்சியினரும்சேர்ந்து ஒத்துழைக்கவேண்டு"மென்று அம்மகாநாட்டிலே வரவேற்புரை நிகழ்த்திய உணவு - கமத்தொழில் மந்திரியார் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன அவர்கள் "வடக்கிலும், கிழக்கிலுமுள்ள எமது நண்பர்கள் எம்மைவிட்டுப்பிரிந்து சென்றிருக்கிறார்கள்; இந்தப்பிளவு நீடித்தால் நாட்டின் அரசியல்ஐக்கியத்தை எவ்வாறு நிலைநாட்ட முடியுமென்பது சந்தேகமே" என்றுகூறி இளநாக்கடித்திருப்பதும் அவர்களுக்கு விளங்காதிருக்கப் போவதில்லை. இந்தநிலைமையிலே பாராளுமன்றம் சென்ற 18-ந்திகதியன்று கலைக்கப்பட்டுவிட்டது. பொதுத்தேர்தல் சம்பந்தமாய் இலங்கைமுழுவதும் மூன்றுபிரிவுகளாக வகுக்கப்பட்டு வருகிற சித்திரை 5-ம், 7-ம், 10-ந்திகதிகளாகிய வியாழன். சனி, செவ்வாய்க்கிழமைகளிலே அது நடந்தேறவிருக்கிறது. அபேட்சகர்கள் தங்கள் நியமனப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கவேண்டிய தினமாகப் பங்குனிமாதம் 8-ந் திகதியைக் கவர்னர் - ஜெனறல் குறித்திருக்கின்றார். இலங்கையின் மூன்ருவதுடொமினியன் பாராளுமன்ற அங்கத்தவர்களின் பொதுத்தேர்தற்காலம் சித்திரை 4-ந்திகதிக்கும், 11-ந் திகதிக்குமிடையிலாகும். இவ்விதம் பொதுத்தேர்தல் அடுத்துவந்துள்ள இச்சந்தர்ப்பத்திலே தமிழ்ப்பேசும் மக்களின் கதியாது? ஐக்கியமுன்னணியை ஆசித்திருந்த அவர்கள் பாடு இலவுகாத்த கிளியைப்போலவே முடிந்தது. அரசியற்கொள்கைகளில் மாறுபட்ட கட்சிவாதிகளும், கட்சிப்பற்றில்லாச் சுயேச்சைவாதிகளும் அபேட்சகர்களாகப் பொதுத்தேர்தலுக்கு முற்பட்டுநிற்கும்போது ஐக்கியமற்ற தமிழர்களின் வருங்காலநிலைமை யாதாகுமோ?

---

● கொலைக் குற்றவாளிகளுக்கு மரணதண்டனை விதிப்பதை நீக்கிவிடவேண்டுமெனப் பிரித்தானிய பாராளுமன்றம் சென்றவியாழக்கிழமை அதிகப்படியான வாக்குகளாலே தீர்மானித்துவிட்டமையால் அங்கு மரணதண்டனை விதிக்கப்பெற்றிருந்த மூன்று கொலைக்குற்றவாளிகள் மறுநாட்காலை புதுநம்பிக்கையுடன் துயில்விட்டெழுந்தார்களாம். இவர்கள் தூக்கிலிடப்படக் குறித்ததவணை இப்போது பின்போடப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

# ஆதிக்கிறீஸ்தவ முறையில் பரிசுத்த வாரம்

## பெரிய வெள்ளிக்கிழமைச் சற்பிரசாத அனுபவிப்பு

### உத்தானத்திற்கு நடுச்சாமப்பூசை

பரிசுத்தவாரத்திலும், உத்தானத்திலும் ஆதிக்கிறீஸ்துவர்கள் பிரசித்த ஆராதனைமுறையைத் திரும்பவும் அனுசரிக்கும் ஒழுங்குகள் அடங்கிய கட்டளையைத் திருச்சடங்குச்சங்கம் ரோமையில் பிரசித்தப்படுத்தியிருக்கிறது. இந்தக்கட்டளை இவ்வருடம் குருத்தோலைஞாயிறன்று (பங்குனி 25) நடைமுறைக்கு வருகின்றது. லத்தீன ரீதிக் கிறீஸ்துவர்கள் இதுசம்பந்தமாக அனுசரிக்கவேண்டியவைகளை இங்கேதருகிறோம். கடைசி இராப்போசனத்தை ஞாபகப்படுத்தும் பெரியவியாழக்கிழமைத் திவ்வியபூசை மாலை 5 மணிக்கும், 8 மணிக்குமிடையில் நிறைவேறும். பெரியவெள்ளிக்கிழமைத் திருச்சடங்கு காலையில் அல்ல, மாலைமூன்று (3) மணிக்கும், ஆறு (6) மணிக்குமிடையில் நடைபெறும். இவ்வருடம் முதல்முறையாகக் கத்தோலிக்கர் அனைவரும் பெரியவெள்ளித் திருச்சடங்கிலே சற்பிரசாதம் உட்கொள்ள உத்தரவுண்டு. உத்தான விழிப்புச்சடங்குகள் மாலையில் ஆரம்பமாகும். பெரிய சனிக்கிழமை (அல்லேலூயா) இரவு உத்தான ஞாயிற்றுக்கிழமைக்குரிய திவ்வியபூசை நடுச்சாமத்தில்நடக்கும்.

திருச்சடங்குச்சங்கம் பரிசுத்தவாரத்தின் (பிரசித்த) ஆராதனைச் சடங்குமுறையை மாற்றியமைத்திருக்கும் கட்டளை இருபிரிவானது. மேற்கூறியமாற்றங்களை உண்டாக்கியதன் நோக்கத்தை விளக்குவதுஒன்று. மற்றையது குருத்துஞாயிறுதொடக்கம் பரிசுத்தவாரத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் மாற்றங்களை விபரிப்பது.

### பாரிய மாற்றங்கள்

முற்காலம் திவ்வியநற்கருணை ஏற்பாட்டை ஞாபகமூட்டும்திருச்சடங்கு பெரியவியாழக்கிழமை பின்னேரம் நடந்தது. ஆண்டவருடையமரணத்தை நினைவூட்டும் விசேஷ திருச்சடங்குகள் பெரியவெள்ளிக்கிழமை பிற்பகலில்நடந்தேறின. சனிக்கிழமை மாலை ஆடம்பரவிழிப்புச்சடங்குகள் ஆரம்பமாகி, உயிர்த்த ஞாயிற்றுக்கிழமைகாலை உத்தான ஆனந்தத்தோடு முடிவுபெற்றன. இச்சடங்குகள் நடக்க நேரம் பலகாரணங்களையும்முன்னிட்டு மத்தியயுகங்களில் மாற்றப்பட்டன. ஆதலின், அக்கால முடிவில் இச்சடங்குகளெல்லாம் காலைவேளையிலேயே நடந்தேறின. இம்மாற்றத்தின் விளைவாகச் சுவிசேஷம்கூறும் சம்பவங்களுக்கும், பிரசித்த ஆராதனை முறைக்குமிடையில் இருக்கவேண்டியஒற்றுமை குலைந்துபோயிற்று. மேலும், முற்கூறியதைவிடப் பாரதூரமான மாற்றமொன்றும் ஏற்பட்டது. பலநூற்ருண்டுகளாகப் பெரிய வியாழன், வெள்ளி, சனிக்கிழமைகள் ஓய்வுநாட்களாக அனுசரிக்கப்பட்டமையால் விசுவாசிகள் பரிசுத்தவாரத் திருச்சடங்குகளில பங்குபற்றக் கூடியவர்களானார்கள். பதினேழாம்நூற்ருண்டிலோ சமுதாயத்தில்உண்டாகிய மாற்றங்களின்நிமித்தம் மேற்கூறியதினங்கள் ஓய்வுநாட்களாக அனுசரிக்கப்படவில்லை.

### வெறுங் கோயில்கள்

இக்காரணங்களின் நிமித்தம் இத்திருச்சடங்குகளில் பங்குபற்றக்கூடிய விசுவாசிகளின் எண்ணிக்கை அருகியது. இந்நாட்களில் இச்சடங்குகள் வெறுங்கோயில்களில் நடந்தேறுவது கண்கூடு. இது பாரதூரமான ஓர் நஷ்டமாகின்றது. ஏனெனில், இச்சடங்குகள் விசேஷமகிமையுள்ளவைகளாய் இருப்பதுமாத்திரமல்ல, சிறப்பான அருட்கருவிகளாயு மிருக்கின்றன. பிரசித்த ஆராதனைத் திருச்சடங்குகளுடன் சம்பந்தமில்லாத வேறெந்தப் பத்திமுயற்சிகளும் இவைகளுக்கீடாகா. இக்காரணங்களின்நிமித்தம் ஆராதனை ரீதிவல்லுனரும், குருமாரும், விசேஷமாக மேற்றிராணிமார்களும் விசுவாசிகள் அதிகம் இலகுவாகப் பரிசுத்தவாரத் திருச்சடங்குகளில் பங்குபற்றத்தக்கதாகத் தற்போதையமாற்றங்களைச் செய்யும்படி மனுப்பண்ணியிருந்தார்கள். பரிசீலனைக்காக 1951-ம் ஆண்டு பாஸ்கு விழிப்புத் திருச்சடங்கு மாற்றப்பட்டது. இதனால்வந்த பலன்களைப்பற்றி அநேகமேற்றிராணிமார் அறிவித்து, பரிசுத்தவாரத்தின் மற்றைய சடங்குகளையும் மாற்றும்படி விண்ணப்பித்தார்கள். மேலும், மாலையில்பூசை நிறைவேற்றுவதினால் உண்டாகும் பலன்களைப்பற்றியும், ஏராளமான விசுவாசிகள் அதில்பங்குபற்றக் கூடியதாயிருப்பதையும் விசேஷமாகக் குறிப்பிட்டார்கள். இந்த நன்மைகளைமுன்னிட்டுத் திருச்சடங்குச்சங்க கருதினல்மார் ஏகமனதாய் அனுமதித்துப் பரிசுத்தபாப்பானவரின் கட்டளைக்கிணங்க முன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சதாசகாயமாதா கோணம்

• "பெற்றதாயிலும் மேலான உருக்கமுள்ள தேவதாய்"

(முன்தொடர்ச்சி)

நான் எனதுகையை அவருடைய உருவழிந்த உள்ளங்கையிலவைத்து, "சிநேகிதனே! நீர் ஒருகத்தோலிக்கனாக இருந்தால் — பாவசங்கீர்த்தனஞ் செய்ய விரும்பினுல் எனது கையை மெதுவாய் அழுத்தும்" என்று சொன்னேன். அவர் எனதுகையைஅழுத்தவே எனதுதேகம் புல்லாரித்தது. அவருக்குச் சுயஅறிவு இருந்தது. ஆனுல், பேசமுடியவில்லை. எனவே, நான் பாவங்களின்பெயரைக் கூறுவதாகவும், அவற்றில் அவர்கட்டிக்கொண்டபாவங்கள்இருப்பின் என்கையை அமத்தும்படியும் நான் அவருக்குச் சொன்னேன். இந்தப்பிரகாரமாக அவருடைய பாவசங்கீர்த்தனத்தைக் கேட்டுமுடித்தேன். அந்தச் சைகையாலே தான் தேவஙற்கருணை பெறவிரும்புவதாகவும் அவர்எனக்குத் தெரிவித்தார்.

எவ்வளவோ கஷ்டப்பட்டுத் தனது நாவை நீட்டினுர். அது எவ்வளவோ வீங்கிப் பொருமியிருந்ததைப் பார்க்க என்தேகம் பதறியது. நான் திவ்விய சற்பிரசாதத்தை நாக்கில் வைக்கவே, அவருடைய கண்களிலிருந்து கணணீர்வடிந்தோடியது. அது ஆனந்தக் கண்ணீராயன்றி மற்றெதுவாயும் இருக்கமுடியாது. நான் அவருக்கு அவஸ்தைப்பூசுதலுங்கொடுத்து, ஆறுதல்கூறி, இன்னுஞ்சில மணித்தியாலங்களின்பின் அவரைத்தரிசிக்க வருவதாகச் சொன்னேன். அவசியதேவைகண்டால் எனக்குத்தெலிபோன்மூலம் அறிவிக்கும்படி நேர்ஸுக்கும் சொன்னேன். பின்னர் தேவநற்கருணைச் சிமிழுள் இருந்த இரண்டாம் ஒஸ்தியைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டே ஆஸ்பத்திரியைவிட்டுக் குருமனைக்கேகினேன்.

சாயந்தரம் 1 மணிபோலத் தெலிபோன்மணி அடித்தது. செய்தி ஆஸ்பத்திரியிலிருந்துதான் அனுப்பப்பட்டது. நான் கண்ட நோயாளியின் பெண்சாதியும், பிள்ளைகளும் அவரைக் காணுதேடி ஆஸ்பத்திரிக்கு வந்திருக்கிறார்களென்றும், அவர் மரணத்தறுவாயில் இருக்கிறரென்றும், நான் உடனே அங்குவந்தால் நலமாயிருக்குமென்றும் அறிவித்தார்கள். நான் சுணங்காது சென்றேன். தன் பெண்சாதியையும், நாலுபிள்ளைகளையும் பரதவிக்கவிட்டு, மிக்க சாந்தமாகவும், அமைதியாகவும் அவர் தனது கடைசி மூச்சைவிட்டார் இந்தச்சிலுவையை அவர்மனைவி உண்மையான கிறிஸ்துவ தைரியத்துடனும், தியாகசிந்தையோடும் ஏற்றுக்கொண்டாள். தேவன் அவளையும், அவள் பிள்ளைகளையும் ஆசீர்வதிப்பாராக.

நான் தனது பிரியபத்தாவுக்கு ஆற்றியுள்ளசேவைக்காக அவர்மனைவி தன் நன்றியை எனக்குத் தெரிவித்தபின், திருச்சபையின் கடைசித் தேவதிரவிய அனுமானங்களைப்பெற்றுத் தான்நல்ல மரணம் அடையும்வரத்தைப் பெறுவதற்காகப் பரிசுத்த தேவதாயாரைத் தனதுகணவன் ஒவ்வொரு நாளும் இரந்துகேட்கத் தவறவில்லையென்றும், தேவதாயார் தன்னை ஒருபோதுங் கைவிடமாட்டாளென்ற திடமான நம்பிக்கை தனக்குண்டென்று அவர் அடிக்கடி தங்களுக்குச் சொல்லிவந்தாரென்றுங் கூறினுள். தேவமாதாவின்பிள்ளை ஒருபோதும் நித்தியமாய்க் கெட்டுப்போகாதென்ற உண்மைக்கு வேறு சாட்சியமும் வேண்டுமா?

அதிசயமாகச் சிமிழிற் தோன்றிய "இரண்டாம் சற்பிரசாத"த்தைப்பற்றியும், அவளின் கணவன் ஆஸ்பத்திரியில் இருந்தவிஷயத்தை நான் அறியவந்த விதத்தைப்பற்றியுஞ் சொல்லவே அவளுடைய கண்களில்இருந்து நன்றிக்கண்ணீர் வழிந்தோடியது. விம்மல் பொருமலிடையே "பெற்றதாயிலும் உருக்கமுள்ள தேவதாயாரின் தயவு இருந்தவாறென்னே!" என்று மாத்திரம் சொல்லித் தன் அழுகையைச் சமாளித்துக்கொண்டாள்.

(வண. எஸ். தோமஸ் சுவாமியார் "தொம்பொஸ்கோவின் தேவமாதா" எனும் ஆங்கிலபத்திரிகைக்கு அனுப்பிய கடிதத்தின் தமிழ்ச்சாரம்).

---

கூறியமாற்றங்களைக் கட்டளை பண்ணியிருக்கிறார்கள்.

(விளக்கங்கள் தொடரும்)

---

## ஸ்ரீமான் அ. பிரான்சீஸ்பிள்ளை அவர்களின் தேகவியோகம்

நம்பட்டணத்திலே செம்பிள்வீதியிலுள்ள "லூர்துவில்லா" எனுங்கிருகத்தில் வசித்திருந்தவரும், சுருட்டுத் தொழிற்சாலைஅதிபரும், அன்பாதரவு, தயைதாட்சணியம், அனுதாபசிந்தையாம் சீரியகுணசீலருமான ஸ்ரீமான் அலேஸ்பிள்ளை பிரான்சீஸ்பிள்ளை (பேதுருப்பிள்ளை) அவர்கள் காத்திராப்பிரகாரம் சென்ற 18-2-56 சனிக்கிழமை உருமத்தின்போது மரணத்திரையுள் மறையலாயினுரெனும் துயரசெய்தியானது எவர்க்குமே பெருங்கவலையைத் தருவதாயிற்று. மரிக்கும்போது இவருக்கு வயது 68.

"முயற்சி உயர்ச்சிதரும்" என்னும் முதுமொழிக்கு ஓர்எடுத்துக்காட்டாக விளங்கியஇவர் கோவில்களுக்கும், பத்திச்சபைகளுக்கும்,மற்றும்தருமகைங்கிரியங்களுக்குமாகப் பணஉதவியும், பிறஉதவிகளும் தாராளமாகச்செய்துவந்தார். திருநெல்வேலி, அர்ச்.பிரான்சீஸ் சவேரியார்கோவில் இன்று அளித்துநிற்கும் சோபிதகாட்சியும், நாரந்தனை சம்பேதுரு, சம்பாவிலு கோவில் மணிக்கோபுரகாட்சியும், பிறவும் இவர் பெயரை என்றைக்கும் ஞாபகப்படுத்தும் மாட்சிச்சின்னங்களாகத் திகழுமெனலாம்.

இவரது புத்திரிகள்இருவரிலும் சிரேஷ்டபுதல்வி ஓர்திருக்குடும்பசபைக் கன்னியாஸ்திரியான சங். சிஸ்றர் மேரி பிறசென்ரேஷன் அவர்கள். கனிஷ்டபுதல்வி கார்மேல்சபைக் கன்னியாஸ்திரியான பாலகயேசுவின் சங். சிஸ்றர் மேரி கலிஸ்ரா அவர்கள். திருக்குடும்ப கன்னிகாசபையைச்சேர்ந்த சங். சிஸ்றர் மேரி நெவிற் அவர்கள் இவரின் சகோதரியாவர். சுருட்டுத் தொழிற்சாலை முதலாளியாராயிருந்து காலஞ்சென்ற ஸ்ரீமான் அ. வஸ்தியாம்பிள்ளை அவர்கள் இவரின் சிறியதந்தையாவர். யாழ்ப்பாணம், அரசினர் பெரியஆஸ்பத்திரியில் கடமையாற்றும் டக்றர் பற்றிக் இம்மனுவேல்அவர்கள் இவரின் மருகராவர்.

இவர் 27-11-53-இல் அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றுஞ்சபையில் நவசிடராகி, 25-2-55-இல் அசிசியார்என்ற பெயரோடு வார்த்தைப்பாடு கொடுத்துச் சபையிலுட்பட்டுப் பொறுமை, சாந்தம், இரக்கம் முதலாம் சற்குணங்களில் சிறந்திருந்தார். இவர் பாரியாரான ஸ்ரீமதி லூர்தம்மாவும் அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றுஞ்சபையைச் சேர்ந்தவராவர்.

இவரின் பிரேதசேமம் மறுநாள் 19-ந்திகதி ஞாயிற்றுக்கிழமைபிற்பகல் அநேக குருப்பிரசாதிகளும், கன்னியாஸ்திரிமாரும், அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றுஞ்சபைச் சகோதரர்சகோதரிகளும், பெருந்திரளான இனசனர், சிநேகிதர்களும்சமூகமாக, வண. என். பெனடிக்ற் சுவாமியாரையும், வண. ஜே. பிரான்சீஸ்சுவாமியாரையும் துணைக்கொண்டு ஆசனக்கோவில் கட்டளைக்குரவர் வண. ஜோண் மேரிசுவாமியவர்கள் துக்கசங்கீதம்பாடிக் கடைசி ஆசீர்வாதம்கூறிநிற்கச் சிறப்பாகநடந்தேறியது. அழகியபேழையுள்வைத்து, இருவெண்பரிகள் பூட்டப்பட்டிருந்த பிரேதவண்டியின் பரிகளை அகற்றிவிட்டு அவரதுதொழிற்சாலைப் பணியாளர்களே சேமக்காலைவரையில் அதைஇழுத்துச்சென்று தங்கள் கடைசிமரியாதையை அவருக்குத் தெரிவித்துநின்றார்கள். இவரைஇழந்துதுன்புறும்பாரியாரோடும், பிள்ளைகளான சங். கன்னியாஸ்திரிமாரோடும், மற்றுமுள்ள இனசனரோடும்நாமும் அனுதாபப்படுகின்றோம்.

R. I. P.

---

## சுதேச வர்த்தமானம்

### புத்தஜயந்தியும் தவறணைகளும்

1956-ம் ஆண்டின் வைகாசிமுதல் 1957-ம் ஆண்டின் ஆனிவரையுமுள்ள புத்தஜயந்திவிழாக் காலத்திலே ஒவ்வோர்மாதத்திலும் வருகிற முக்கியபவரணைத் தினங்களிலே சகலதவறணைகளும், பிறதேசகுடிவகைச் சாய்ப்புகளும் மூடப்படவேண்டுமென்று உள்நாட்டுமந்திரிசபை தீர்மானித்திருக்கிறது. தவறணைகளை மூடுவதாலே குத்தகைகாரருக்கு ஏற்படும்நஷ்டங்களுக்கு அரசாங்கம் நஷ்டபரிகாரம்அளிக்கவிருக்கிறது. ஆனுல், சாராயம் வடிப்பதற்கென்று கள்ளுச்சேர்ப்பது தடைசெய்யப்படமாட்டாது.

### சமய துவேஷப் பிரசுரங்கள்

இலங்கையிலே சமயதுவேஷப் பிரசுரங்கள்சம்பந்தமான மகாநாடு உள்நாட்டுமந்திரியாரான திரு. ஏ. இரத்நாயக அவர்களுக்கும், சத்தோலிக்க திருச்சபை, மற்றும் கிறீஸ்துவசபைகளின் குருசிரேஷ்டர்களுக்கு மிடையே இம்மாதம் 28-ந் திகதியன்று நடைபெறவிருக்கிறது. இந்த மகாநாட்டுக்குத் தாமே நேர்முகமாகச் சமுகமளிப்பதாகக் கொழும்புஅதிமேற்றிராணியார் உள்நாட்டு மந்திரிசபைக்குத் தெரிவித்திருக்கின்றார். இந்தமகாநாடு சமயங்களிடையே சச்சரவுகளை உண்டுபண்ணுதற்கேதுவான பிரசுரங்களை அச்சிடுவதையும், பரப்புவதையும் தடுத்துவைக்க என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்பதுபற்றிக் கலந்துவிவாதிக்கவிருக்கின்றது. இந்தவிதமான சமயதுவேஷப் பிரசுரங்களை அச்சிடுகிறவர்களும், வெளியிடுகிறவர்களும் சட்டமூலம் தண்டிக்கப்படுவார்களென உள்நாட்டு மந்திரியார் தெரிவித்திருக்கின்றார்.

### பிரதமரும் வகக்கோட்டையும்

பிரதமர் சேர்ஜோண் கொத்தலாவல அவர்கள் சென்ற14-ந்திகதி தம்பளைக்கு விஜயஞ் செய்திருந்தபோது வகக்கோட்டையூரும் கிராமத்தையும் பார்வையிடலாயினர். அப்போது அங்குள்ள அர்ச். அந்தோனியார்கோவில் அவருக்குக் காண்பிக்கப்படலாயிற்று. இற்றைக்கு நான்குநூற்றாண்டுகளுக்கு முன் போர்த்துக்கேயரால் அங்கு கொண்டுவரப்பெற்ற திருச்சுரூபம் இருந்துவருகின்ற திருசேத்திரத்தையும் அவர்தரிசிக்கலாயினர். அப்போது நடைபெற்ற கூட்டம்ஒன்றிலே அவர் பேசியபோது, தாம் போக்குவரத்து—பகிரங்கவேலை மந்திரியாராய் இருந்தபோது, பகிரங்கவேலைப் பகுதியைச் சேர்ந்த 2,500 பேரும், அவர்களின் குடும்பத்தினரும் யாத்திரையாகச் சென்று வகக்கோட்டை அர்ச். அந்தோனியார் திருசேத்திரத்தைத் தரிசிக்கத் தாம் ஒழுங்குசெய்ததை ஞாபகத்தில் கொண்டுவரலாயினர்.

### றெயில்வேஸ்றேஷன் தோட்டங்கள்

சென்ற 1955-ம் ஆண்டிலே தங்கள் றெயில்வேஸ்றேஷன் தோட்டங்களை அதிகம் சிறப்பாகநடத்திய ஸ்றேஷன் மாஸ்றர்மாருக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. வடபாக றெயிற்பாதையிலே வெள்ளாவை ஸ்றேஷன் மாஸ்றர் திரு. எம். கனகசபாபதி — 1-ம் பரிசில். மட்டக்களப்பு – திரிகோணமலைப் பாதையிலே வாழைச்சேனை ஸ்றேஷன்மாஸ்றர் திரு. என். எவ். சேவியர் — 2-ம் பரிசில். வெலிகந்தை ஸ்றேஷன்மாஸ்றர் திரு. எஸ். பரமலிங்கம்— 3-ம் பரிசில். மாத்தளை றெயிற்பாதையிலே வத்தேகம ஸ்றேஷன்மாஸ்றர் திரு. ஜோஸே ஞானப்பிரகாசம் — 1-ம் பரிசில். கடுகாஸ்தோட்டை ஸ்றேஷன்மாஸ்றர் திரு. ஜோண் ஞானப்பிரகாசம்–2-ம் பரிசில். சிலாபப்பாதையிலே கட்டுநாயக ஸ்றேஷன்மாஸ்றர் திரு. எஸ். டி. நாகலிங்கம் — 2-ம் பரிசில். பிரதானபாதையிலே வட்டவளை ஸ்றேஷன்மாஸ்றர் திரு. எம். செல்வத்துரை — 1-ம் பரிசில். தியத்தலாவை ஸ்றேஷன்மாஸ்றர் திரு. ரி. சிவகுருநாதன்—1-ம் பரிசில். தெமொதெரை ஸ்றேஷன்மாஸ்றர் திரு. கே. சின்னத்துரை — 2-ம் பரிசில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யூதாசின் அவநம்பிக்கை

[திருஇருதய சபையைச்சேர்ந்த யோசெபா மெனென்டஸ் எனும் பரிசுத்த கன்னியாஸ்திரிக்கு யேசுக்கிறீஸ்துநாதர் அருளிய காட்சி ஒன்றின்போது வெளிப்படுத்தியது.]

" ஒலிவமாத்தோப்பில் நம்மைஎதிரிகளிடம் காட்டிக்கொடுத்த பிற்பாடு யூதாஸ் சுற்றித்திரிந்தான்; அவன் செய்த மிகப்பெரும் தேவதுரோகம் அவனுடைய மனச்சாட்சியை உபாதித்தது; நாம் மரணத்துக்குத் தீர்ப்பிடப்பட்டேன்என அவன் கேள்விப்பட்டதும், அவன் அவநம்பிக்கைக்குள்ளாகி நான்றுகொண்டு செத்தான்.

" நாம் நேசித்துநெடுநாள்படிப்பித்துவந்த இந்தஆத்துமத்தை நாம் பார்த்ததும் நம்இருதயம் பட்டதுயரத்தை யார் அளவிடமுடியும்? அவன் நமது போதனைகளை ஏற்றுக்கொண்டவன்; மிகப்பெரிய அக்கிரமங்களுக்கும் நாம் மன்னிப்புக்கொடுத்ததை எம் வாயிலிருந்தே கேட்டிருந்தஅவன், கடைசியாகத் தன்னை நித்தியகேட்டுக்குள் வீழ்த்திக்கொண்டான்.

" ஆ, யூதாஸ்! நீவந்து நம்பாதத்தில் ஏன் விழவில்லை? உனக்கும் நாம் மன்னிப்புக் கொடுத்திருப்போமே! நம்மைச்சுற்றியிருந்த கூட்டம் கோபத்துடன் கூவிக்கொண்டிருந்தமையால் நீ நம்மிடம் வரப் பயப்படுகிறதாயிருந்தால், நம்மைப் பார்க்கக்கூடாதா?... நமகண்கள் உன்கண்களைச்சந்திக்கும்—இப்பொழுது முதலாய் அவை உன்னையே நேசத்துடன் நோக்குகின்றன.

"பாவத்தில்மூழ்கி உங்கள்பாவங்களை முன்னிட்டு நம்மைப் பிரிந்து நெடுநாளோ அல்லது சொற்பநாளோ அலைந்து திரிகிறவர்களே, நீங்கள்செய்துள்ள பாவங்கள் உங்கள்இருதயங்களைக் கடினப்படுத்திக் குருடாக்கியிருக்குமானால்—உங்களுடைய ஆசாபாசம் ஒன்றைத் திருப்திப்படுத்தும்படி பாவப்பாதையில் விழுந்து விட்டீர்களானால்—நீங்கள் பாவத்தில்விழக் காரணமாயிருந்தவர்கள் அல்லது உங்களுடன் பாவம் செய்தவர்கள் உங்களைக் கைவிட்டுவிட்டால், உங்கள் ஆத்துமஸ்திதியை நீங்கள் உணரும்பொழுது, ஓ! அப்பொழுது அவநம்பிக்கைக்கு இடங்கொடாதேயுங்கள்; ஏனெனில், உயிர் இருக்கும்வரை ஒருவன் இரக்கத்தினிடம் சென்று மன்னிப்புக்கேட்கலாம்.

"நீ இன்னும் வாலிபவயதினனாயிருந்தால், உன்வாழ்க்கையில் நீ காண்பித்துள்ள துர்மாதிரிகைகளால் நீ உலகத்தின்மதிப்பை இழந்துபோனால் பயப்படாதே. உன்னைக் குற்றவாளியாகத் தீர்ப்பிட்டு, குற்றவாளியேபோல் நடத்தி நிந்தித்துத் தள்ளிவிடக் காரணமிருந்தபோதிலும், நீ நரகஅக்கினிக்குள்விழ உன்கடவுள் விரும்புவதில்லை.

" உன்னை அணுகிஉன்னை மன்னிக்க அவர் வெகு ஆசையாயிருக்கிறார். நீ அவரருகிற்செல்லத் துணியாவிட்டால் உன் இருதயத்தின் பெருமூச்சுகளாவது அவரை அணுகும்படி விடு. உடனே தகப்பனை அவருடையகரங்கள் மன்னிப்பினுடையவும், சிவியத்தினுடையவும் ஊற்றண்டை உன்னை இட்டுச்செல்லும்படி நீட்டப்பட்டிருப்பதைக்காண்பாய்.

" உன் வாழ்க்கையின் பெரும்பாகத்தைப் பாவத்திலும், அசதியிலும் செலவழித்து, திடீரென மரணம்வந்து உன்னை அவநம்பிக்கைக்குள்ளாக்கி, உன் கண்களை நித்தியத்துக்கும் மூடப்போவதாகப் பயப்படுத்துகையில், நீ அவநம்பிக்கைக்குள்ளாகும்படி உன்னை விட்டுவிடாதே. வாழ்க்கையில்இன்னும் ஒருவினாடிமாத்திரமே உனக்குஇருந்தபோதிலும், மன்னிப்புக்கு இன்னும் நேரம்இருக்கிறது. இதுநிச்சயம். அந்த ஒருவினாடியில் நித்தியசிவியத்தை நீ திரும்ப விலைக்கு வாங்கிக்கொள்ளலாம்.

உன் வாழ்நாள் முழுவதையுமே நீ அறியாமையிலும், தப்பிதங்களிலும் செலவழித்திருப்பாயானால்—மற்றமனிதர்களுக்கும், சமுகத்துக்கும், மதத்துக்குமே பெருந்தீமையின் காரணமாக நீ இருந்திருப்பாயானால்—உன் ஆத்துமத்தின்நிலையையும், உன் தப்பிதத்தையும் நீ அறியவருவாயானால், உன்பாவங்களும், நீஇழைத்த தீமைகளும் உன்னை நசுக்கவிடாதே; ஆனால், ஆழ்ந்த மனஸ்தாபம்நிறைந்த இருதயத்துடன் நம்பிக்கைஎன்னும் ஊற்றில் உன்னை எறிந்துவிடு. உன்னை மன்னிக்கும்படி உன்வரவை எதிர்பார்த்திருப்பவரிடம் விரைந்து செல்.

" சிறுவயதிலிருந்தே நம் சட்டங்களைப் பிரமாணிக்கமாய் அனுசரித்து நாளடைவில் அசதிகொள்பவர்களுக்கும் நாம் இதையே சொல்லுகிறோம். ஒருநாள் அந்தஆத்துமம் உண்மையைக்கண்டறிகிறது. வாழ்க்கையே வெறுமனாகத் தோன்றுகிறது. மோட்சம் அடையமுடியாதெனத் தோன்றுகிறது. பசாசு பொறுமையுடன் அந்த ஆத்துமத்தைப் பலதிசைகளிலும் இழுத்து, அதை அதைரியப்படுத்தி விசனத்திலாழ்த்தி...அதன் குற்றங்களைப் பெரிதாக்கி, கடைசியாக அதைப் பயப்படுத்தி அவநம்பிக்கைக்குள்ளாக்குகிறது.

"ஓ! நம்முடையவனான ஆத்துமமே, இந்தக்கொடியசத்துருவின் பேச்சைக் கேளாதே... நம்வரப்பிரசாதம் உன் இருதயத்தைத் தொட்டதும் போர் தொடங்குமுன்னரே நம்மை நாடிவா. நம்இரத்தத்தில் ஒருதுளி உன்மீது ஊற்றும்படி எம்மைக் கெஞ்சிக்கேள். நம்மிடம் வா. சற்பிரசாத திரையினுள் நாம் எங்கே இருக்கிறோமென்று உனக்குத்தெரியும். திரையைத்தூக்கு. உன் நிர்ப்பாக்கியத்தையும், தவறுதல்களையும்பற்றிய வரலாற்றை முழுநம்பிக்கையுடன் திறந்துசொல். நம் வார்த்தைகளுக்கு வணக்கத்துடன் செவிகொடு. கடந்தகாலத்தைப்பற்றிப் பயப்படாதே. நம்நேசம், இரக்கம்என்னும் அலைகளினால் உன்பழைய பாவங்கள்யாவும் மூடப்பட்டுவிட்டன. நீ தாழ்ச்சியுள்ளவனாயிருக்க உன்பழையபாவங்கள் ஓர் தூண்டுகோலாயிருக்கும். உன்பேறுபலனை அதிகரிக்கும். உன் நேசத்துக்குச்சிறந்த அத்தாட்சி காண்பிக்க நீ விரும்புவாயானால், நான் மன்னித்துவிட்டேனெனவும், உன்பாவங்கள் ஒருபோதும் நம்இரக்கத்துக்குச் சமமாகா என்றும் நம்பு. ஏனெனில், நம் நேசமும், இரக்கமும் அளவற்றது.

" அன்பின் அருங்குரல் "

> சிந்தியாமல் வேகமாகப் பேசுவது "பிறேக்" இல்லாமல் வண்டியை வேகமாகச் செலுத்துவது போலத்தான்.

## நாளு சங்கதிகள்

● சிஸ்ரைன் சிற்றாலயத்தின் பாதுகாப்பாளரின் தாயாகவும், வத்திக்கான் இராச்சியத்தின் அதிவிருத்தாப்பியபிரசையாகவும் இருந்துவந்ததிருமதி. மரியா பொளுத்திஎனும்மாது தனது 91-ம் வயதிலே சமீபத்தில் காலஞ்செல்லலாயினள். அந்தியவேளை பரிசுத்தபிதா இவளுக்குத் தமதுஆசீர்வாதம் அனுப்பியிருந்தார்.

● இரும்புத்திரைக்குப் பின்னாகவுள்ள நாடுகளில்ஒன்றாகிய செக்நாட்டிலுள்ள கம்யூனிஸ்தவிரோதிகள் அங்கிருந்தும் ஆஸ்திரியாவுக்குத் தப்பியோடுவதையிட்டு செக்-ஆஸ்திரிய எல்லைப்புறநீளம் செக்நாட்டிலே மனிதர் நடமாடாத ஓர்பகுதியை வகுப்பதற்காகச் செக்கோசிலவாகிய கம்யூனிஸ்த அரசாங்கம் அப்பகுதியில் இருந்துவந்த கிராமங்களையெல்லாம் அழித்துத் தரைமட்டமாக்கி விட்டிருக்கிறது.

● 2,500-வது சம்புத்த ஜயந்தியின் ஞாபகார்த்தமாக இந்தியாவிலே டில்லி நகருக்குச்சமீபமாயுள்ள பிரமாண்டமான ஓர்கற்பார்கொண்டு புத்தரின் இராட்சதசிலையொன்று கொத்தப்படவிருக்கிறது. அதற்கேற்ற கற்பார் ஒன்றைத் தெரிவுசெய்யுமாறு இந்திய பிரதமர் ஜவஹர்லால் நேரு.அவர்கள் மகாபோதிசபையின் பிரதமகாரியதரிசியான திரு. டி. வலிசிங்காஎன்பவரைக் கேட்டிருப்பதாகச் செய்திகிடைத்திருக்கிறது.

● பிரித்தானிய கன்பெறா வெடிகுண்டுவிமானம்ஒன்று சென்றவியாழக்கிழமை லண்டனிலிருந்து எகிப்திய கெய்ரோநகருக்கு 3 மணித்தியாலம் 59 நிமிஷத்தில் பறந்துசென்று பிரசித்திபெற்றிருக்கின்றது. இதற்கு முன் டே ஹவிலண்ட் கமெற்விமானம் ஒன்று 1950-ம் ஆண்டு சித்திரை 24-ந் திகதியன்று குறைந்தநேரமாக இருநகர்களுக்கு மிடையிலுள்ள 2,183 மைல்தூரத்தையும் 5 மணித்தியாலம் 7 நிமிஷத்தில் பறந்துள்ளது.

● ஐக்கிய அமெரிக்கதேச ஜனாதிபதியாகத் தற்போது இருந்துவருகிறவரான ஜெனறல் ஐஸன்ஹாவர் அவர்களைப் பரிசோதனைசெய்த அவருடைய டக்றர் வாஷிங்ரன் நகரில் சென்ற 14-ந் திகதி அபிப்பிராயந்தெரிவித்தவிடத்து, அவர் இன்னும் ஐந்து அல்லது பத்து வருடங்களுக்கு ஜனாதிபதியாயிருந்து வழக்கமாகத் தமது கடமைகளைக் கொண்டுநடத்தப்போதியவராய் இருக்கக்கூடுமெனக் கூறியிருக்கின்றார்.

● எகிப்திலிருந்து சென்ற சனிக்கிழமை பிரித்தானிய போர்வீரர்களை ஏற்றிக்கொண்டு பிரித்தானியை நோக்கிச் சென்றுகொண்டிருந்த சிவில் ஆகாயப்பிரயாண விமானமொன்று மோல்தாதீவிலே மோதிக்கொண்டு விழுந்து எரிந்தகாரணமாக அதிலிருந்த பிரயாணிகளும், விமானிகளுமான 50 பேர் ஒருங்கே உயிரிழந்தார்கள். இவர்களில் போர்வீரர் 45 பேரென்றும், விமானிகள் 5 பேரென்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

● சூரியமுகத்தினூடாக வீசுகின்ற பெரும்புசலானது உலகமுழுவதிலும் வானொலிச் சிக்னல்களின்பலத்தைப் பாதிக்குமென எதிர்பார்க்கப்படுவதாய் நியூமெக்சிக்கோவிலுள்ள சக்கிறமென்ரோ சிகரத்திலுள்ள ஆகாயப்படைச் சோதிடோப்பரிகை நிபுணர் ஒருவர் தெரிவித்திருக்கின்றார். 61 சூரிய கடும்புள்ளிகளில் மூன்று பூமியைக் காட்டிலும் பெரியனவென்றும், அவைகள் எவ்வாறு புசல்வீசுகிறதென்பதைக் காண்பிக்கின்றனவென்றும் ஹார்வாட் சர்வகலாசாலையைச் சேர்ந்த திரு. ஹோவாட் டமாஸ்துஸ் எனும் வானசாஸ்திரி கூறுகின்றார்.

## பிராணிவைத்தியர்கள்

பிராணிகளே தங்களுக்கு நோய்வந்த காலத்தில் வைத்தியம்செய்துகொள்ளுகின்றன. குரங்குகள் பல்வைத்தியம் செய்கின்றன. பறவைகள் ஒடிந்த கால்களுக்குக் கட்டுக் கட்டுகின்றன. முதலைகள் சீரணசக்திக்கு மருந்துசாப்பிடுகின்றன. என்ன ஆச்சரியமாக இருக்கிறதேஎன்று ஆச்சரியப்படுவீர்கள்.

மிருகங்களின் வாழ்க்கையைக் கூர்ந்து கவனித்துவரும் வில்லியம் ஜே. லோங் என்பவர் ஒரு நீரோடையின் அருகில் உட்கார்ந்திருந்தார். அப்பொழுது ஒருகாட்டுக்கோழி ஓடைக்கரையின்மீது உட்கார்ந்து சிறிது களிமண்ணை எடுத்துத் தன்கால்வில் ஒட்டவைத்துக் கொண்டது. பிறகு சிறிதுதூரம் போய்ச் சிறுநார்களை எடுத்து அதன் மீது சுற்றிக்கொண்டது. பிறகுமறுபடியும் ஓடைக்கரைக்குவந்து களிமண்ணை அதன்மீது ஒட்டவைத்தது. இதுபோல அதுபலதடவைகள் செய்துகொண்டபின் தன்மூக்கினால் அக்கட்டை ஒன்றரைமணி நேரம்வரையில் தேய்த்துத் தேய்த்து மழமழப்பாகவும், கெட்டியாகவும் செய்துகொண்டது. தன்கால் சரியாகிவிட்டதென்று தெரிந்தவுடன் அது பறந்துவிட்டது.

### குரங்கிற்குப் பல்வலி

வெவர்லைஸல்ஸ் என்பவர் வளர்த்துவந்த மனிதகுரங்கு வெயிலில் உட்கார்ந்திருந்தது. அருகில் சென்று பார்த்தபொழுது அதன்முகத்தின் ஒருபுறத்திலும், வாய்க்குள்ளும் களிமண் அடைத்திருந்தமை தெரிந்தது. அதன் முகம் வீங்கியிருந்தது. இரண்டுநாட்கள் கழிந்தபிறகு அக்குரங்கு தன்பற்களில்ஒன்றைப் பிடுங்கிக் கையிலெடுத்துக்கொண்டுபோய்த் தன் எசமானரிடம் மகிழ்ச்சியுடன் காட்டியது. பிறகுதான் வெவர்லைஸல்ஸ் தமதுகுரங்கிற்குப் பல்வலிஎன்றும், அந்தவலியை அதுவே குணப்படுத்திக்கொண்டதென்றும் அறிந்தார்.

### முதலைகளின் முன்யோசனை

குளிர்கால உறக்கத்திற்குப் பிறகு முதலைகளின் வயிற்றைப் பரிசோதித்துப் பார்த்தார்கள். அதில் கல், கட்டை, மற்றும்இவைபோன்ற சீரணமாகாத வேறுபொருட்களையுங் கண்டார்கள். முதலைகள் தூங்கப்போகும்பொழுது கல், கட்டை முதலியவற்றை வேண்டுமென்றே விழுங்குகின்றன. தூங்குங்காலத்தில் வயிற்றிலுள்ள சீரணப்பை முதலியஉறுப்புகளுக்கு வேலை கொடுக்கவே அவைகள்இவ்வாறு செய்கின்றனவாம்.

### மான்களின் உணவுக்கட்டுப்பாடு

மிருகங்களில் சில உணவுக்கட்டுப்பாடு செய்துகொள்ளுகின்றன. மான்களின் வாழ்க்கை இதை நிரூபித்துக் காட்டுகிறது. மான்கள் கர்ப்பமாக இருக்கும்போது பத்தியஉணவே அருந்துகின்றன. கலைமான்கள் தங்களுக்குக் கொம்புமுளைக்கும் காலத்தில் பலமைல் ஓடிச்சென்று தாதுப்பொருள்கள் நிரம்பியுள்ள தண்ணீரைக் குடிக்கின்றன. கொம்பு வளர்வதற்குத் தாதுப்பொருள்கள் தேவைஎன்பதை அவைகள் அறிந்திருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுமைப் பெண்

— பி. ஏ. தாஸ் —

நான் பால்யமுதலே துடுக்குக்காரியென்று பெயரெடுத்தவள். அதிலும் கல்விப்படியில் நான்ஏறஏற என் துடுக்கும் அதிகமாகவே ஏறிக்கொண்டிருந்தது. மிராசுதாரின் ஒரேமகள்நான். எங்கள் கிராமத்தில் வைதீகஆசாரம் அதிகம். சாதிக்கட்டுமானத்தையும் பொருட்படுத்தாது என் தந்தை என்னைக் கல்லூரியில் படிக்கவைத்தார். பிறகுநான் அதிக உற்சாகத்துடனே வைத்திய கல்லூரியில்சேர்ந்து டக்டர் பட்டமும் பெற்றேன்.

எங்கள் கிராமமுழுவதும் எங்கள் குடும்பத்தைப்பற்றி ஒருமாதிரியாகப் பேசினார்கள். எனவே, என் தந்தை திருச்சியில் பங்களாஒன்றுவாங்கி என்னுடனே வசிக்கவந்துவிட்டார். சிறுவயதிலேயே என் அம்மாவை நான் இழந்துவிட்டதால், அப்பா என்மீது உயிரையேவைத்திருந்தார். "லேடிஸ் டிஸ்பென்ஸரி" என்ற மருந்துச்சாலை ஒன்றை நான் தனியாகச் சொந்தத்தில் வைத்துநடத்த அவரே மிகுந்தபொருளுதவிசெய்து துணையாக என் அருகிலேயே இருந்தார். மகனில்லாத அவருக்கு மகள்பெருமைகூட டக்டராகப் பணியாற்றுவதில் பரமதிருப்தி; விவரிக்கஇயலாத பூரிப்பு!

செல்வசுகத்திலும், வைத்தியப்பணியிலும் 'சர்வாதிகாரி'யாகவே தந்தையைத்தவிர மற்றவர்களைமதியாது, மமதையாகவேஇருந்தேன். "டக்டர் லட்சுமி" என்று எல்லோரும் என்னை அழைப்பதில் எனக்கு ஓர் அலாதிப் பெருமை! கழுத்திற்கிடக்கும் மலர் மாலையைப்போல, 'ஸ்டெத்தாஸ்கோப்' என்கழுத்தை அலங்கரிக்க — ஆங்கில கீதமொன்றை அலட்சியமாகப்பாடிக்கொண்டு என் மருந்துச்சாலைக்கு நான் செல்லும்போது தப்பித்தவறிப் பிச்சைக்காரரையோ—கால்காசுக்குவகையில்லாப் பிணியாளர்களையோ நான் கண்டுவிட்டால், "எரிமலை"யாகத்தான் எரிந்து விழுவேன். 'ஸ்டெத்தாஸ்கோப்'பைக் கோபமாகச் சுழற்றிய வண்ணம் அவர்களைத் திட்டிவிட்டுத்தான் அப்பால்செல்வேன்.

அந்தஆணவநாட்கள் அழிந்து ஆறு ஆண்டுகளுக்குப்பின் இன்றுநினைக்கும்போது எனக்கு வெட்கமும், சிரிப்பும், வேதனையுந்தான் ஏற்படுகின்றன. அடியோடு என்னைமாற்றியமைத்துப் பெண்மைப்பண்புடன் 'சேவை'க்கே என் வாழ்வைத் தியாகமிடச்செய்த அந்தச் சம்பவத்தை எப்படித்தான் என்வாழ்நாள்முழுவதும் நான் மறக்கமுடியும்!

* * *

ஓர்எஞ்ஜினியரின்மனைவிக்கு வயிற்றில் ஒரு சத்திரவைத்தியம் செய்யவேண்டிய முக்கிய வேலையொன்றிருந்தது. ஆதலால், அன்று வழமைக்குமாறாகக் காலை ஆறுமணிக்கே என் மருந்துச்சாலையின் மாடியறைக்கு வந்துவிட்டேன். எனது ஆழ்ந்தசிந்தனையைத் தட்டிநிறுத்தியவை, வீதியோரத்தினின்று எழுந்த பெருங்குரலொன்றும்,—பிணியாளியின் கரகரத்த குரலொன்றும்! என்னவென்று பார்ப்பதற்காகச் சன்னலோரம்சென்று என் பார்வையைக் கீழேதாழ்த்தினேன்.

நான்பலமுறை அடித்துத்துரத்திய அதே குஷ்டரோகப்பெண் வீதியோரத்தில் குப்பைமேட்டில்கிடக்கும் கந்தல்துணிபோல நிலைகுலைந்துகிடந்தாள். அவள்பக்கமாக ஒரு ஐரோப்பிய கன்னிகை குனிந்து வாஞ்சையுடன் பேசிக்கொண்டிருந்தார்.

அவர்களின் சம்பாஷணையை உற்றுக்கேட்டேன்.

கரகரத்த தொண்டையில் அந்த நோயாளி பேசினாள்:

"இரக்கமற்று எல்லோரும் என்னைத் துரத்திஅடிக்கும்போது நீங்கள் மட்டும் ஏன்என்மீது இவ்வளவு அனுதாபப்படுகிறீர்கள்...?" அவளின் விழிவளைவுகளில் நீர்த்துளிகள்தானும் குமையஆரம்பித்துவிட்டன.

கன்னிகையின்முகத்தில் ஓர் அலாதிக் கனிவுததும்பியது. பேச்சிலே தாயின் வாஞ்சை வீசியது.

"கடவுள் உன்னையும், என்னையும் படைத்தாரம்மா. உனக்கும், எனக்கும் அவரே பிதா. உலகம் எத்திசையும்சென்று எனது அன்பைப் பரப்புங்கள்; குறிப்பாக ஏழைகளுக்கும், பிணியாளர்களுக்கும் என்று அவரே சொல்லியிருக்கிறார். பிறர்சிநேகந்தான் மனிதப்பண்பு. சுகமுள்ளவர்கள் சுகமற்றவர்களுக்கு ஏற்ற உதவி செய்வது கடமை. எழுந்து வாம்மா! இதோ இந்தவண்டியில்ஏறி எங்கள் ஆஸ்பத்திரிக்குவா. அங்கு சகலவசதிகளுடன் உணவும், ஆரோக்கியமும் நாங்கள் அளிக்கிறோம்."

சதைகள் புரைத்துச் சிதைந்து முகமே கோரமாகஇருந்த அவளது முகத்தில் ஓர்ஆனந்த ஆச்சரியப் புன்னகை மின்னியது. "ஆஹா! என்ன அற்புதமான அன்பு! இது எங்கிருந்து வந்தது? யார் அந்தப்பிதா?"

வாஞ்சையுடன் கன்னிகை அவளுக்கு அந்தஇடத்திலேயே சுருங்கச் சிலகூறினாள். "மனிதகுலத்தின்மீது மங்காவாஞ்சைகொண்ட அன்புக்கடவுள் தமதுமகனையே மனுக்குலம்உய்ய உலகிற்குஅனுப்பினார். அவரே யேசுக்கிறீஸ்து. கொடுமைகளைஏற்று, அன்புமதத்தைப்போதித்து, மனுவுக்காகத் தம்மைச் சிலுவைக்குப் பலியாக்கினார்" என்று அவள் கூறிமுடிப்பதற்குள்ளாகவே அவள்—

"யார் அந்தக்கிறீஸ்து? எப்போ அவர் இந்த உலகிற்கு வந்தார்? நாற்பது ஐம்பதுவருஷம் இருக்குமா?" என்று வியப்புடன்கேட்டாள்.

"அவர்வந்து இரண்டாயிரம்ஆண்டுகள் முடியப்போகின்றன" என்றாள் அந்தக்கன்னிகை.

"அம்மா! உங்களுக்கு இருக்கும் இந்தஅனுதாபம் ஏன் இந்தப்பூமியில் பிறந்த மக்களுக்கு வரவில்லை? குஷ்டத்தைக்கூடச் சகித்துச் சேவைசெய்யும் உங்கள்தியாகம் எங்கிருந்து வருகிறது?... அந்தயேசுநாதருக்காகவா நீங்கள் இவ்வித அன்புப்..."

* * *

அதற்குமேல் என்னால் அந்தச்சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டு அங்கு நிற்க முடியவில்லை. கர்வங்கொண்ட என் இதயத்தை அணுக்குண்டுபோலவே அந்தவார்த்தைகள் ஒவ்வொன்றும் தாக்கிப்பிளந்தன. சித்தம்கலங்கியபடி அறையில் குறுக்கும் நெடுக்குமாக வெகுநேரம் நடந்துகளர்ந்தேன். என் மனதில் ஓர்புதுப்புயல் சுழன்றுவீச ஆரம்பித்தது.

"எம்நாட்டின் சரித்திரத்திலே ஆரம்பமுதல் இன்றுவரை அந்நியப் படையெடுப்பில் இரத்தவெள்ளம்ஓடி அநாகரீகத்த[illegible] அன்புக்காக — தியாகத்திற்காக — வாழ்ந்த—வாழச்செய்யவந்த தன்னலமற்ற தியாகப்பரம்பரை யார்? கத்தோலிக்கரே! அவர்களே 'தியாகம்' என்ற பதத்திற்கு உயிர்கொடுக்கும் செயலாளர்கள். நாட்டுமக்களைவளர்க்கும் ஆக்க மன்னர்கள். அன்பாசர்கள். நாகரீகத்திற்கும், அறிவுவளர்ச்சிக்கும் வித்திட்டவர்கள் அவர்களே!" என்று என்னையும்மீறிஉணர்ந்து புலம்பினேன். பிறகு புதுவிழிப்புடன் சன்னலோரம் ஓடிப் பார்வையைத்தாழ்த்தினேன்.

அந்தக் குஷ்டரோகப் பெண்ணைச் சுமந்துகொண்டு கன்னிகையின் மாட்டுவண்டி தெருக்கோடியில் மறைந்துகொண்டிருந்தது.

அன்றுமாலையே கத்தோலிக்க கன்னிகாமடத்திற்கு நான்ஓடிக் கத்தோலிக்கசமய நூல்களைப் படிக்கஆரம்பித்தேன்.

ஆறு ஆண்டுகளுக்குப்பின் — இன்று நான் — !

மணமில்லாமலே மக்கள்குலத்திற்காகவே என்வாழ்வைத் தியாகம்செய்து என்முழு நேரமும் ஏழைகளுக்கும், அனாதைப் பிணியாளர்களுக்கும் பணிசெய்து பூரித்துவரும், "புதுமைப் பெண்"ணாகவே வாழ்ந்துவருகிறேன். இன்றுதான் என்பிறவிப்பயனைப் பெற்றுவிட்டதுபோன்ற ஓர் பெருமிதம் என் இதயத்தில் பூத்துச் சேவை இன்பத்தில் என்னை வசப்படுத்தி வருகிறது.

— ஞானத்தூதன்

## ஸ்தானுபதிக்குப் பயணோபசாரம்

சென்றவாரம் யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ்செய்த மாட்சிமைதங்கிய பாப்பரசரின் ஸ்தானுபதியாண்டவரை நேர்முகமாகக்கண்டு, அப்போஸ்தலிக்க ஆசீர்வாதத்தைப்பெறும் பாக்கியம் பெற்றோமில்லையேயென்று வதிரி, திருஇருதய கல்லூரி பெருமூச்செறிந்து நிற்கும்போது, ஸ்தானுபதியாண்டவர் அவர்கள் தமதுகோவிலைப் 16-ந் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்குச் சந்திப்பதோடு தமதுவிஜயத்தை யாழ்ப்பாணத்தில் முடிப்பாரென்று மிருசுவில் கட்டளைக்குரவர் எம் திருஇருதய கல்லூரிஅதிபருக்குச் செய்திஅனுப்பிவைத்தார்.

பழம்நழுவிப் பாலில்விழுந்ததுபோல் தமது ஜனனபதியில் ஸ்தானுபதியாண்டவரைச் சந்தித்து வழியனுப்புவதே பெரும்பாக்கியமென்று நமதுகல்லூரி அதிபர் மகிழ்ச்சிகொண்டார். அதனால் அவரைத் தலைமையாகக்கொண்டு நூற்றுக்கணக்கான மாணவர்களும், ஆசிரியர்களும், கிறீஸ்தவர்களும் மோட்டார் ரதமூலமும், மோட்டார்வான் மூலமும் மிருசுவில் சந்நீக்கிலார் முனீந்திரர் கோயில்வளவில் சென்றுகூடினார்கள்.

அங்கு பாடசாலைமாணவர்களும், கல்லூரிமாணவர்களும் முன்னணியிலும், பங்குக்கிறீஸ்தவர்கள் பின்னணியிலும் ஐயைந்துபோராக இருமங்கும் வரிசையாகப் பாப்பரசரின்கொடிகளைத் தாங்கியபடி அணிவகுத்து நின்றார்கள். 3 மணிக்கு ஸ்தானுபதியாண்டவர் நம் மேற்றிராணியாண்டவர் சமேதராய்த் தமது அந்தரங்க காரியதரிசிசுவாமிகளுடன் கோயில்வளவின்வாயிலில் வந்திறங்கவே கோயில்மணி கீதநாதஞ் செய்தது. திருஇருதய கல்லூரிஆசிரியர் என். எம். சிங்கராசாஅவர்கள் சித்திரவேலைப்பாடமைந்ததாய்ச் செபமாலைபோன்று காட்சியளித்த மலர்மாலையொன்றை அவருக்குச்சூட்டினார்.

மிருசுவிற் பாடசாலைச் சிறார்கள் தமிழ்ப்பாஷையில் தொடங்கி, இத்தாலியபாஷையில்முடியும் வரவேற்புக்கீதமொன்றை ஒரேதொனியாய் மிகஇனிமையாகப் படித்தார்கள். ஸ்தானுபதி ஆண்டவர் கூடியிருந்த மக்களின் தன்மையைக்கவனித்து மனங்களித்தார். அதன்மேல் பீடத்தெழுந்து, தாம் அத்துணைபெருந்தொகையான மக்களை இங்கு ஒருபோதும் எதிர்பார்க்கவில்லையென்றும், கட்டளைச்சுவாமியாரைச் சந்தித்துப்போவதே தமது இட்டமாயிருந்ததென்றும், இங்குபெருந்திரளான மக்களையும், மாணவர்களையுங்காண்பது உங்கள்விசுவாசத்தின் ஸ்திரத்தையும், பாப்பரசர்மேல் நீங்கள்கொண்டுள்ள உண்மையானபற்றையும் துலாம்பரமாக்குகிறதென்றும்கூறிச் சகலருக்கும் நன்றிதெரிவித்து அப்போஸ்தலிக்க ஆசீர்வாதம் அருளினார். மீண்டும் முன்போல எல்லோரும் அணிவகுத்து நிற்க, மோட்டார்ரதம் மறைகிறவரையிலே பாடசாலைச்சிறார்கள் பிரியாவிடைக்கீதம்படித்து அவரை வழியனுப்பி வைத்தார்கள்.

— திருபா

## ஸ்தானுபதியின் விஜயம்

"இலங்கைசென்று எமதுபெயரால் அங்குள்ள நமதுமக்களை ஆசீர்வதித்து, நாம் அவர்கள்பால் இணையற்ற அன்புகொண்டிருப்பதாகத் தெரிவித்து, அவர்கட்கு நமது ஆசீர்வாதமும் அருளுங்கள்" என்று அண்மையிலே திரிகோணமலைக்கு விஜயம்செய்த பாப்பரசரின் அப்போஸ்தலிக்க ஸ்தானுபதியாகிய மாட்சிமைதங்கிய மாட்டீன் லூக்காஸ் ஆண்டகைஅவர்கள் கடந்த 13-2-56 திங்கட்கிழமை திரிகோணமலைக் கத்தோலிக்கமக்கள் தம்மைவரவேற்று உபசரித்தபோது கூறினார். அவரும், திரிகோணமலை மேற்றிராணியாரான மகாவந். இக்கினேசியஸ் கிளெனி ஆண்டவரும் இங்கு வந்தபோது, மூர்தச் சின்னக்கடைப்பங்குக் கிறீஸ்தவர்களும், பாடசாலைமாணவர்களும், ஆசிரியர்களும் அவரை வரவேற்றுநிற்க, பங்குக்குரவர் வண. ஜோண் பீற்றர் சுவாமியவர்கள் மலர்மாலைசூட்டிப் பங்குக்கிறீஸ்தவர்களின் சார்பாக ஓர்சொற்பொழிவும் ஆற்றினார்.

பின்னர் ஸ்தானுபதி ஆண்டகை அவர்கள் மக்களைஆசீர்வதித்துப் பாப்பாண்டவரின் அப்போஸ்தலிக்க ஆசீர்வாதம் அருளிப் பெரியகடைக்குச் சென்றார். அங்கு சங். கன்னியர்களும், வண. குருப்பிரசாதியவர்களும், பாடசாலைப்பிள்ளைகளும், பங்குக்கிறீஸ்தவர்களும் கன்னியர்மடத்தினின்று ஊர்வலமாக அவரை அழைத்துக்கொண்டு ஆலயத்துள் பிரவேசித்தனர். வண. ஜெறோம் டீசா சுவாமியவர்கள் மலர்மாலைசூட்டி அவரைவரவேற்றார். அங்கும்அவர் பாப்பரசரின் சுபசெய்தியை எடுத்துக்கூறினார். அதிலும் பாப்பரசர் எங்கட்காக அதிகமதிகம் மன்றாடுகிறார்; அதற்குநன்றியறிதலாகவும், வரப்போகும் அவருடைய 80-வது பிறந்தபெருநாள் ஞாபகார்த்தமாகவும், ஒவ்வொரு குடும்பமும் அவருக்குப் பரிசிலாகத் தேவஅழைத்தலுக்குப் பிள்ளைகளை ஒப்புக்கொடுக்க வேண்டுமென்றும், அதற்காகச் சர்வேசுரனிடம் அதிகமாக மன்றாடிவர வேண்டுமென்றும் கூறிநின்றார். ஈற்றில் அப்போஸ்தலிக்க ஆசீர்வாதம் அருளித் திவ்விய நற்கருணை ஆசீர்வாதம் வழங்கினார். மறுநாட்காலை திவ்வியபூசைப்பலிநிறைவேற்றிப் பிற்பகல் யாழ்ப்பாணமேகினார்.

— திருபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் வானம்

"நாட்டின் நலன்கள்கருதிப் பின்வரும் நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு தங்களுக்கு மனுப் பண்ணுகிறோம். (1) ஐ. தே. கட்சியைவிட்டு உடனேதானே விலகிவிடும். (2) ஒரேயொரு ஸ்தானத்திற்கு மாத்திரமே போட்டியிடும். (3) பதில்அரசாங்கத்தை ஆக்குவதற்குச் செய்யும் பிரயத்தனங்களில் ஸ்ரீலங்காசுதந்திரக் கட்சி, திரு. பிலிப் குணவர்த்தனவின் லங்கா சமசமாஜகட்சி, அகில-இலங்கைச் சிங்களபாஷாபெரமுனை ஆகியவற்றுடன் சேர்ந்துகொள்ளும்" என்று பொதுத்தேர்தலுக்கு அபேட்சகர்களைத் தெரிவுசெய்யும் சிங்களபாஷா பெரமுனைச்சபை தம்பதேனியாப் பிரதிநிதியாகிய திரு. ஆர். ஜி. சேனநாயகாவுக்குச் செய்தியனுப்பியிருக்கிறது.

## கம்யூனிஸ்ததலைவரின் ஆரம்பம்

இலங்கையிலே கம்யூனிஸ்த தலைவரான டக்றர் எஸ். ஏ. விக்கிரமசிங்க என்பவர் அக்குறெசைத்தொகுதியிலே தனது தேர்தல்போராட்டத்தைத் தொடக்கிவிட்டார். இந்தியாவிலே புத்தசமயமுயற்சிகளுடனும், மற்றும் புத்தர்களுக்கு விசேஷப்பட்ட தலங்களுடனும் சம்பந்தப்பட்ட சினிமாப் படங்களையும், இன்னும் இந்தியபிரதமர் ருஷியாவுக்கு விஜயஞ்செய்தது பற்றிய சினிமாப்படங்களையும் காட்சி காண்பித்துத் தனதுதேர்தல் பிரசாரங்களை நடத்திவருகின்றார். இவருடன் அக்குறெலசஸ்தானத்துக்கு ஐ. தே. கட்சிஅபேட்சகராகத் திரு. டி. சி. வணிகசேகரஎன்பவர் போட்டியிட்டுத் தமது தேர்தல்பிரசாரங்களைத் தொடக்கியிருக்கின்றார்.

## பாடம் படிப்பிக்கவேண்டும்

திரு. ஆர். ஜி. சேனநாயக தமது கட்டுப்பணத்தைதயே இழக்கக்கூடிய வகையில் களனித்தொகுதி வாக்காளர்கள் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவுக்கு வாக்களித்து, அவருக்கு ஓர்பாடம் படிப்பிக்கவேண்டுமென்று களனியிலே சென்ற ஞாயிற்றுக்கிழமை நிகழ்ந்த ஐ. தே. கட்சிமகாநாட்டில் பேசியபோது பிரதமர் சேர் ஜோண் கொத்தலாவல அவர்கள் கூறியிருக்கின்றார். ஆசியத்துறையிலே தமக்குண்டான பொறுமையை மேற்கொண்டு பாராளுமன்றத்தில் ஐ.தே.க.இன் பெரும்பான்மையைக் குறைப்பதற்கு அவர்வருந்தி முயல்வது துக்கமும், வெட்கமுமென்றும் அவர் கூறலாயினர்.

## ஐ. தே. கட்சியின் கொள்கை

மாறுவிலிலே சென்றபுதன்கிழமை நடைபெற்ற பகிரங்க கூட்டமொன்றில் பிரதமர் சேர் ஜோண் கொத்தலாவல அவர்கள் பேசியபோது பின்வருமாறு குறிப்பிடலாயினர். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவரான திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக அன்றோர்கூட்டத்தில் பேசுகையில், தான் பிரதமராகவந்தால் அரசாங்க பாஷையாகச் சிங்களத்தை ஆக்குவதற்கு ஐ.தே. கட்சி தன்னுடன்சேர்ந்துகொள்ளுமெனக் கூறியிருக்கின்றார். ஆனால், திரு. பண்டாரநாயகவுடன் சேருவது ஐ. தே. கட்சியல்ல, திரு. பண்டாரநாயகதானே ஐ. தே. கட்சியுடன் சேர்ந்துகொள்வார்; அவரின் கூற்று குதிரைக்குமுன் வண்டியைப் பூட்டுவது போன்றதாகும்; இப்போது ஏழுஸ்தானங்களை மாத்திரமே கொண்டிருக்கும் திரு. பண்டாரநாயகவின் கட்சி மறுமுறை ஒரேயொரு ஸ்தானத்தையே கொண்டிருக்கவேண்டி வரும்.

---

## பூனையால் நேர்ந்தகொலை

திரிகோணமலையிலே தாக்கியஒழுங்கையில்வசிக்கும் ஜேம்ஸ் சிங்கோஎன்பவனின் பூனையொன்று ஓர்நாள்இரவு அதேஒழுங்கையில் வசிக்கும் சைமன் சிங்கோவின் சமையல் அறைக்குச் சென்று ஏதோபுரளி பண்ணிவிட்டது. உடனே சைமன் சிங்கோ அதனைப்பிடித்திஅடித்து, அசப்பியவார்த்தைபேசி, "இந்தப்பூனையாலே ஓர் மீன்துண்டைத்தானும் ஒருவர்வைத்துக்கொள்ள முடியாமலிருக்கிற"தென்று முறையீடுபண்ணினான். பின்னர் அந்தப்பூனையைக் கழுத்திற்பிடித்து, தாறுமாறுகப்பேசிக்கொண்டு நிலத்திலமோதவே அது இறந்துபோய்விட்டது. பின்பு சைமன் சிங்கோ இறந்தபூனையை அந்தப்படியே ஜேம்ஸ் சிங்கோவின் வீட்டுக்குறுமபாகஎறிந்துவிட்டு, "பூனைகளைச்சரியாக எப்படி வளர்க்கிறதென்று சொந்தக்காரனுக்குத் தெரியாவிட்டால் அவனுக்கும் இந்தமாதிரியாகத்தான் செய்வேன்" என்றான். இதைக்கேட்டதே ஜேம்ஸ் சிங்கோ எழுந்துபோய் "உனதுமீனைத் தின்னென்று நான்பூனைக்குச் சொல்லவில்லை; மீனைநல்லஇடத்தில்பக்குவமாக நீவைத்திருக்கவேண்டும்"என்றுகூறித் தகாதபேச்சுகள் பேசியபடியே, தனது வீட்டின் விறுந்தையிற்கிடந்த உலக்கைபோலும் ஓர்பொல்லைஎடுத்துக்கொண்டு ஓடிச்சென்று சைமன் சிங்கோவின் மண்டையில் ஓர்அடிபோட்டான். அந்தஅடியுடன் ஆள்நிலத்தில்விழுந்து இறந்துபோயினான். இந்தக்கொலைவழக்குத் திரிகோணமலைக்கோட்டிலே சென்றவெள்ளிக்கிழமை விசாரணை செய்யப்பெற்றுச் சுப்பிறீங்கோட்டுக்குப் பாரப்படுத்தப்பட்டுள்ளது.

## பரிதாபகரமானவிபத்து

சுப்பிறீங்கோட்டு நீதியரசர் எம். எஸ். பிள்ளை அவர்களின் புதல்வியான செல்வி யோசெப்பின் மேரிப் பிள்ளை எனும் 16 வயதுப்பெண்மணி சென்ற ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் பம்பலப்பிட்டியிலே சென்அல்பான் பிளேஸுக்குச்சமீபமாய்ச் சென்றுகொண்டிருந்த எக்ஸ்பிறெஸ் றெயின்வண்டி ஒன்றினால் மோதுண்டு மரணமாயினார். விபத்துக்காரணமாக அவரின் உடல் துண்டிக்கப்படலாயிற்று. இப்பெண்மணி தனதுசிநேகிதியான 22 வயதுடைய லக்ஷிமி டி. சொய்சாஎனும் பெண்மணியுடன் றெயிற்பாதையிலே நடந்துகொண்டிருக்கையில் இந்தப் பரிதாபகரமானவிபத்து ஏற்படலாயிற்று. குறித்தஎக்ஸ்பிறெஸ் றெயின்வண்டி அவ்வேளை மொறட்டுவாவிலிருந்து மருதானையைநோக்கிச் சென்றுகொண்டிருந்தது. லக்ஷிமி டி. சொய்சாஎன்ற மற்றப்பெண்மணி பலத்தகாயங்களுடன் அறிவுநினைவற்றநிலைமையில் கொழும்புப் பெரியஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப்பெற்றுக் குணமடைந்துவருகிறார். நீதியரசர்பிள்ளை அவர்கள் விபத்துநிகழ்ந்த சிறிதுநேரத்துள் அவ்விடத்துக்கு விரைந்துசென்று இறந்தபெண்மணி தமதுமகள்தானென்று ஒப்புக்கொண்டார். அவருக்கு இந்தஒரேயொரு புதல்விதான் இருந்தாரென்றும், அப்பெண்மணி பம்பலப்பிட்டித் திருக்குடும்ப கன்னிகாமடத்தில் கல்விபயின்று வந்தாரென்றும் சொல்லப்படுகிறது. விபத்து நிகழ்ந்த அன்றுகாலை செல்வியோசெப்பின் மேரிப்பிள்ளை பம்பலப்பிட்டியில் திவ்வியபூசைகண்டு திவ்விய நன்மை பெற்றிருந்தார்.

# NOTICE

**English Teachers' Drawing Certificate Examination**

Saturday classes for preparing Lady students for the above Examination are being conducted at the Holy Family Convent, Jaffna. This year seems to be the last for such Exams. Hence students are advised not to miss this opportunity. Those who wish to join, meet me at H. F. C. at 8-30 a.m. on 25-2-56 and make the necessary arrangements.

A. S. FRANCIS OF MARY,
(Art Lecturer,
Teachers' Training College,
Colombogam.)
60/9, "Nazareth House",
Old Park Rd., Jaffna.

---



## பொழுது போக்கு

வில்லி தன் தகப்பனுருடன் றெயின் வண்டியில் பிரயாணஞ் செய்துகொண்டிருக்கும்போது தனதுதொப்பி வெளியிலே பறந்துபோகக்கூடிய நிலைமையில் றெயின்வண்டிச் சன்னலில் பிடிவாதமாகநின்று வெளிக்காட்சி பார்த்துக்கொண்டிருந்தான்.

தகப்பனுர் சொல்லியே சொல்லிப் பார்த்தார். அவன் கேட்கவில்லை. கடைசியாக அவன்பாராக்காய்இருக்கும் போது அவனுடைய தொப்பியை எடுத்துப் பின்புறமாக மறைத்துக் கொண்டு, "வில்லிஉன்தொப்பி போய் விட்டது" என்றுர்.

உடனேவில்லி அழத்தொடங்கிவிட்டான்.

மெத்தநல்லது, நான் விசிள் ஊதினால் உனதுதொப்பி திரும்பவந்துவிடும் என்றுர் தகப்பனுர்.

உடனே விசிள்ஊதினுர். ஊதியதும் வில்வியின் தலையிலே தொப்பியைச் சட்டென வைத்துவிட்டார்.

வில்லிக்கு ஓரேஆச்சரியம். உடனே அவன் தனதுதொப்பியை எடுத்துச் சன்னல்வழியாக வெளியே எறிந்துவிட்டு, "பப்பா, விசிள் ஊதுங்கள்; தொப்பியை மறுபடியும் வரப்பண்ணுங்கள்" என்றுன். தகப்பனுர்திருகத் திருக விழித்தார்.



## நன்றியறிந்த ஸ்தோத்திரங்கள்

எனதுபத்தாவுக்கு நேர்ந்த கடும்வருத்தமானது எவ்வித ஊசிமருந்துகளாலும் பெரியடக்றர்மாராலும் குணமடையாது கடைசியாகச் சதாசகாயமாதாவினதும், அர்ச். செபஸ்தியாரினதும்மன்றுட்டினுல் பூரணசுகம் அடைந்து தனதுவேலையைச் செய்துவருகின்றுர். நேர்த்திப்படி இதனைப்பிரசுரிக்கிறேன். சதாசகாயமாதாவினதும், அர்ச். செபஸ்தியாரினதும் நாமம் எங்கும் புகழப்படுவதாக.

Malacca Mrs. V. M. Pillai

* * *

அர்ச். பத்தாம்பத்திநாதரிடம் இரந்துகேட்டபடி அவரின் மன்றுட்டின் பலனுக யான் எனது பரீட்சையில் வெற்றிகரமாகச் சித்தியடைந்தேன். இப்பேருதவி புரிந்தருளிய அன்னரின் பொன்நாமம் புவியெங்ஙணும் போற்றிப் புகழப்படுவதாக. நேர்த்தியின்படி இதனைப் பிரசுரஞ்செய்கிறேன்.

யாழ்ப்பாணம் எம். ரி.

* * *

சதாசகாயமாதாவே, புதுமையுள்ள தாயே, எனக்குச் சிலகாலங்களாய்உண்டானவருத்தம் எத்தனையோ பிரதான டக்றர்மாரால் கண்டுபிடிக்கமுடியாமல் முதல் யாழ்ப்பாண பெரியஆஸ்பத்திரியிலும், பின்பு கொழும்பு பெரியஆஸ்பத்திரியிலும் அங்குள்ள பிரபலியமான டக்றர்மாரால் அநேகபடங்கள் எடுத்தும், கண்டுபிடிக்கமாட்டாமல் இருந்து, கடைசியாக எனது நோயுள்ள வயிற்றுப்பாகத்தை வைத்தியர்ஒருவர் சத்திரசிகிச்சைசெய்து பார்ப்போமெனத் தீர்மானித்தார். அவர்களுக்கே இதுஒரு அதனமான, ஆபத்தான வருத்தமாய்த் தோன்றினது. பின் வயிற்றைத் திறந்தபின் சதாசகாயமாதாவின் விசேஷஅற்புதத்தால் இன்னநோய் என்று கண்டுபிடித்து, வைத்தியரே தன் கண்களை மேலெடுத்துக் கடவுளுக்குத் தோத்திரமென வணங்கி இலேசாகஇந்த அலுவலைச் செய்துமுடித்தார். இது உண்மையாகவே சதாசகாயமாதாவின் புதுமை. அவவிடம் நானும் என் சகோதரர் பிள்ளைகளும் இடைவிடாமல் கேட்டுக்கொண்ட மன்றுட்டத்தாலும் நேர்த்திகளாலும் நாங்கள் ஒருவருமே நினையாத இந்தப்பெரிய புதுமையை எமக்குச்செய்யச்சித்தமானு. இதற்கு நானும், என் தாய், சகோதரங்களும் என்னநன்றி செய்வதென ஏங்கிநிற்கிறோம். அவவின் விசேஷ அற்புதத்தை யாவருக்கும் அறிவிக்கிறேன். அவவுக்கு எங்கள் நன்றிஸ்துதியைச் சீவியகாலம்மட்டும் கூறுவோம், மாதா இன்னும் தமது அருளை என்மேற் செலுத்தி எனக்குப் பூரணசுகத்தைத் தருவாளெனக்காத்து இன்னும் விடாமல் மன்றுடிவருகிறேன்.

யாழ்ப்பாணம் P. M.

---

## விளம்பர விகிதம்

| | ரூ. ச. |
|---|---|
| நன்றியறிந்தஸ்தோத்திரம் ... | 2 00 |
| மரணஞாபகம் ஒரு அங். ... | 2 00 |
| ஓடர் நிசி ( Order Nisi ) | |
| இரண்டுமுறைக்கு ... | 10 00 |

மனேஜர்,
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

---

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, February 23-1956.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனிதவீரன்

அருமைச் சகோதரங்களே!

எமது பரிசுத்தபிதா பன்னிரண்டாம் பத்திநாதரின் ஸ்தானுபதி ஆண்டவரை உங்களில் அநேகர் கண்டிருப்பீர்கள். அவருடைய பேச்சைக்கேட்டுமிருப்பீர்கள்.

யாழ்ப்பாணத்தில் அவர் கூறியதென்ன? எமதுபரிசுத்ததந்தை ஓர் பட்டாளத்தைத் திரட்ட விரும்புகிருர். சாதாரண கிறீஸ்துவர்கள் அதில்சேர வேண்டும். சேர்ந்து கிறீஸ்துவின் இராச்சியத்தைப் பரப்ப உதவவேண்டும்.

இந்தப்படையின் இலட்சணங்கள் நீதியும், கிறீஸ்துவஅன்பும். இக்குணங்களைக் கிறீஸ்துவத் தொண்டர் தம் நினைவு, பேச்சு, நடத்தையிலும் அனுசரித்துப் பிறர்மட்டிலும் அனுசரித்தல் அவசியம். வருகிறபங்குனி மாதத்தில் எமது பரிசுத்தபிதாவுக்கு எண்பது வயதாகும். இதுஒரு விசேஷதினம். உலகத்திலுள்ள கத்தோலிக்க மக்கள் இதைப் பிரதானமாக அனுசரிக்கிருர்கள். அவுஸ்திரியதேச கத்தோலிக்கர் சத்திரவைத்திய சிகிச்சை நிலையமொன்றை அமைத்து அன்பளிப்பாகக் கொடுக்கவிருக்கிருர்கள்.

நாமும் ஓர் அன்பளிப்புச் செய்ய வேண்டும். பரிசுத்தபிதா விருப்பக்கூடியதும் நாம்கொடுக்கக்கூடியதும் எமது செபந்தான். ஆகையால் மேல்வரும் நாலுவாரங்களில் நீங்கள் செய்யக்கூடிய செபதபங்களைப் பரிசுத்தபிதாவின் கருத்துகளுக்காகச் செய்து அவைகளை ஓர் ஞானப் பூச்செண்டாக அனுப்புங்கள்.

உங்கள் அன்புள்ள,
அண்ணு.

---

## அக்கா! அக்கா! இங்கே வா

அக்கா! அக்கா! இங்கேவா!
அம்மா சுட்ட அப்பம்போல்,
அம்புலி வந்து நிற்கிறதே
அங்கே பார்க்க போவோம்வா

* * *

பாட்டி சொல்லுங் கதையெல்லாம்
பால்நில வாலே படிப்போமே
பாட்டி ஔவை நெறியெல்லாம்
பக்கம் இருந்து கேட்போமே

* * *

வட்டம் போல வருவாயே
வளைந்து நாளை தேய்வாயே
தட்டில் பழங்கள் தருவோமே
தனியாய் இங்கே வருவாயோ

* * *

கிண்ணம் நிறையப் பால்தருவோம்
வண்ண நிலாவே வாவாவா
மண்ணில் சோறு கறிகாய்ச்சி
மகிழ்வோம் நீயும் வருவாயோ

— (சங்கு)

---

உங்கள் விஷயதானங்களை மேல்வரும் முகவரிக்கு அனுப்புங்கள் :

"அண்ணு", சஞ்சூசையப்பர் தாபனம்
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னிப்பு

அந்திநேரமாகிவிட்டதால் ஆட்டுக் குட்டிகளுக்கு அவசர அவசரமாகத் தழைகளைப்பறித்துப் போட்டுக்கொண்டிருந்தான் அருளப்பன். டாங் டாங் என்று கோயில்மணி ஒலிக்கவும் முழந்தாளிலிருந்து திரிகாலச் செபத்தைச் சொல்லிமுடித்துத் தழை ஒடிக்கும் கோலை எடுத்துக்கொண்டுபோய் அங்குமிங்கும் சிதறிக்கிடந்த ஆடுகளை ஒன்று சேர்த்து வீட்டிற்குப் போகும்பாதையில் திருப்பிவிட்டான். அதுதான் அவன் வழக்கமாக வீட்டிற்குத்திரும்பும் நேரம். ஆடுகளைக் கொட்டிலில் அடைத்துவிட்டு முகம், கை, கால் கழுவிக்கொண்டு "அருள்நேசன்" சுவாமியாரிடம் ஓடிவிடுவான். இன்று எப்படியாவது அந்தப்படத்தைக் கேட்டுவிட வேண்டும் என்று எண்ணியவாறே நடந்தான்.

அவன் வசித்தகிராமத்தில் தன்குடிசைக்குச் சற்றுத்தூரத்தில்தான் அந்தச்சிறுகோயில் இருந்தது. அதற்குப் பின்னால் சுவாமியார்வசிப்பதற்கு ஒரு சிறிய அறையுமிருந்தது. அங்கிருந்தபடியேதான் சுவாமியார் அக்கிராமத்திலுள்ளவர்களை அன்பால் நடத்திக் கொண்டுவந்தார். அவர்மிகவும் நல்லவர். அவருக்குக் கிராமத்தில் நல்மதிப்புண்டு. எல்லோரிடத்தும் நெருங்கிப்பழகுவார்.

சாந்தப்பபிள்ளையின் மகன் தான் அருளப்பன். வயதுபன்னிரண்டு இருக்கும். அவனைமயக்கிவிட்டது, ஒருசெம்மறியாட்டுக் குட்டியை அன்புடன் அணைத்திருக்கும் பாலகயேசுவைச் சித்திரிக்கும் அந்தப்படம்தான். அது அவன் இருதயத்தில் ஆழமாகப் பதிந்துவிட்டது. ஆடுகளுடன் பழகிய காரணத்தினாலோ என்னவோ படத்தின்மேல் அலாதிஆசை அவனுக்கு. சுவாமியார் வரும்போதெல்லாம் அந்தப்படத்தை விழுங்கிவிடுபவன்போல் பார்த்துக் கொண்டிருப்பான்.

இப்படியாக வளர்ந்த ஆசையினால் சுவாமியாரிடம் அன்றுகேட்டுவிட்டான். "சுவாமி! ஒன்றுகேட்கிறேன் கோபிப்பீர்களா?" என்றான் பணிவாக. "என்ன? அருள் ஏதுவேணும், பயப்பிடாமல் கேள்." "கோபிக்காமல் கொடுக்கிறீர்களா?" என்றான் தயக்கத்துடன்.

சுவாமியார் அவனைப் பார்த்தார். அவன் விழிகள் படத்தையே நோக்கின. உடனே சுவாமியார் பையனுடைய விருப்பத்தை அறிந்துகொண்டார்.

"அருள் இங்கேவா." இது என்னுடையஅம்மாகொடுத்தபடம். அவள்நினைவுக்காக இது ஒன்றுதான் இருக்கிறது. நிச்சயமாக அடுத்ததடவை கொழும்புக்குப் போகிறபோது இதேமாதிரிப்படம் வாங்கிவந்து கொடுப்பேன் கவலைப் படாதே நல்லபிள்ளை.

ஏமாற்றத்துடன் வீடுசென்ற அருளப்பன் அன்றிரவு தூங்கவேயில்லை. குழந்தையேசு அவனை அன்பாய் அழைக்கிறதுபோன்ற ஒரு உணர்ச்சி ஏற்பட்டது. படுத்திருந்தவன் மெல்லஎழுந்து கோயில் பக்கம் சென்றான். சுற்றிலும் பார்த்தான். ஒரே இருட்டு, அமைதியானநேரம், எங்கிருந்தோ ஒரு ஆந்தையின் அலறல் இரவின் பயங்கரத்தை எடுத்துக்காட்டியது. கோயிலை எட்டிப்பார்த்தான். சற்பிரசாத விளக்கு மங்கலாக எரிந்து கொண்டிருந்தது. மெதுவாகச் சுவாமியாரின் அறைப்பக்கம் கண்களைத் திருப்பினான். அங்குவெளிச்சம் தெரிந்தது. சுவாமியார் இன்னும் தூங்கவில்லையா, என்ன....? ஒருவேளை செபம் செய்து

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உண்மை கடைப்பிடி

உரோமைநகரில் ஒருகாலத்தில்பெரிய வேதகலகம் எழும்பி, கிறீஸ்தவர்களையெல்லாம் தேடிப்பிடித்துக் கொல்லும்படி கொடியசட்டம் பிறந்தது. ஆனால், சத்தியவேதக் கிறீஸ்தவர்கள் அஞ்சா நெஞ்சத்துடன் தங்கள் மதாசார முறைமைகளை அணுவளவும் பிசகாமல் அனுசரித்துவந்தார்கள். கடன்பூசை காண ஒருபோதும் தவறமாட்டார்கள். தங்களது உயிரை முதலாய் ஒருபொருட்டாய் எண்ணாமல் திவ்வியபூசை எங்கே காணலாமென்று தேடிச்செல்வார்கள்.

அங்குள்ள ஒரு பட்டணத்தில் ஒரு நாள் நாற்பத்தொன்பது கிறீஸ்தவர்கள் ஒருவீட்டுக்குள் இரகசியமாய்த் திவ்வியபூசை காணப் போயிருந்தார்கள். இதுவிஷயம் எப்படியோ அறிந்த உரோமைச் சேவகர் கதவை உடைத்து உள்ளே நுழைந்து குருவானவரையும், கிறீஸ்தவர்களையும் விலங்கிட்டு நியாயஸ்தலத்திற்கு இழுத்துச் சென்றார்கள். நியாயாதிபதி அவர்களைப் பார்த்து: "ஏன் தேசசட்டத்தை மீறினீர்கள்?" என்றான். உடனே குருவானவர் அவரை நோக்கி: 'ஐயா, கடன்திருநாட்களில் திவ்வியபூசை காணவேணுமென்பது சத்தியதிருச்சபையின் சட்டம். இச்சட்டத்தை எங்கள் உயிருக்குமேலானதாகப் பாவித்து அனுசரித்து வருகிறோம்" என்று பதில்சொன்னார். இதைக்கேட்டநீதிபதி அவர்கள் அனைவரையும் சிறைச்சாலையில்அடைத்து, சித்திரவதைசெய்யக் கட்டளையிட்டார். இந்தக்கிறீஸ்தவர்களுக்குள் ஒருசிறுவனும் இருந்தான். நியாயாதிபதி அவனைப் பார்த்து இரக்கப்பட்டு நயத்தினாலும் பயத்தினாலும் அவனைச் சத்தியவேதத்தை மறுதலிக்கச் செய்ய முயன்றார். ஆனால், சிறுவன் அன்று திவ்விய பூசை கண்டவர்களுக்குள் தானும் ஒருவன் என்றும், கூடுமானபோதெல்லாம திரும்பவும் பூசைகாண்பதே தனது தீர்மானம் என்றும் தைரியத்தோடு யாவரும் கேட்கும்படி உரத்தசத்தமாய்ச் சொன்னான். நியாயாதிபதி அவனை உறுக்கி நோக்கி: "உன்னைச் சித்திரவதை செய்ய எனக்கு அதிகாரமுண்டென்பதை நீ அறியாயோ?" என்று அதட்டிக் கேட்டார். சிறுவனோ: "நீர் என்ன வேணுமென்றாலும் செய்துகொள்ளும்; நான் கிறீஸ்தவன்தான்" என்று யாதொரு அச்சமுமின்றி விடைபகர்ந்தான். இதைக்கேட்ட நியாயாதிபதி அச்சிறுவனையும் மற்றவர்களோடு சேர்த்துக்கொல்லும்படி தீர்ப்புச்செய்தார். அதனால் அப்பையன் வேதசாட்சியாய் மரித்தான். ஆகையால் கத்தோலிக்கராகிய நாங்கள் எதுநேரிடினும் எந்தநேரத்திலும் உண்மையைக்கடைப்பிடிப்போமாக!

— பொ. டேவிற்

---

## புதுச்சொற்கள் உண்டாக்குக

முதலெழுத்தைநீக்கிப் புதியசொல்லை எழுதி உச்சரித்தபின் ஒவ்வொன்றையும் வாக்கியத்திலமை:—

| | | | |
|---|---|---|---|
| உ-ம். | 1. | சுவிசேஷம் | விசேஷம் |
| | 2. | மதுரை | .................... |
| | 3. | முகப்பு | .................... |
| | 4. | புதினம் | .................... |
| | 5. | வேதனம் | .................... |
| | 6. | தவிடு | .................... |
| | 7. | யாதவி | |
| | 8. | வேதாளம் | |
| | 9 | தகுதி | |
| | 10. | தபசு | |
| | 11. | எதி | |
| | 12. | க | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னிப்பு

—✻—

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருப்பாரோ? அல்லது வேறு யாராவது இருக்கக்கூடுமோ? என்று அருளப்பன் அங்கே வேகமாக நடந்தான். ஆம், யாரோ நிற்பது தெரிந்தது. அவன் ஓடப்பார்த்தான், அருளப்பன் தாவிப்பிடித்தான். அவ்வளவுந்தான் அருளப்பன் நினைவிழந்து கீழேவிழுந்தான்.

மறுநாள் சுவாமியாரின் அறைக்கு வெளியே பெரியகூட்டம். யாரோ ஒருவனைச் சுவாமியாரிடம் இழுத்துக் கொண்டுவந்து விஷயத்தைத் தெரிவித்தார்கள். "சுவாமி! இந்தப் பயலை விடக்கூடாது. துணிந்து கோவிலுள் நுழைந்து பெறுமதியான பொருட்களைக் களவாடியதோடு என்மகனையும் அடித்துவிட்டான்" என்று சாந்தப்பபிள்ளை பொருமினர். சுவாமியார் அவர்களைச் சமாதானம் செய்திராவிட்டால் திருடன் கதி அதோகதிதான்.

சுவாமியார் அந்தமனிதனிடம்வந்து: "மகனே நீ திருடியது உண்மையா?" என்று அன்புடன்கேட்டார். தன்னை அன்புடன் அழைத்த சுவாமியாரை ஆச்சரியத்தோடு பார்த்தான் அவன். பதில்சொல்ல முடியாமல் தலைகவிழ்ந்தான்.

சுவாமியார் கூடிநின்ற சனங்களைப் ... ள் கோபத்தைச் சற்று ... வன்செய்தது குற்றந் ... னிப்பது நம்கடமை. ... காலைசெய்தவர் ... த்தார் அது ... த்தை மன் ... ருக்க நல் ... ாதரனுக

வும் ஏற்றுக்கொள்ளுங்கள் என்று சிறு உபதேசம் செய்தார். இருந்தாலும், மகனை அடித்ததற்காகச் சாந்தப்பபிள்ளை முணுமுணுத்துக் கொண்டிருந்தார்.

சுவாமியார் தெரிந்துகொண்டார். அருளப்பனை அழைத்து, அருள் நான் உனக்குச் சொல்லிக்கொடுத்தவை நினைவிருக்கிறதா? நமது யேசு சாகும்பொழுது என்னசொன்னர். "பிதாவே இவர்களை மன்னித்துவிடும். ஏனெனில், இவர்கள் செய்வதுஎன்னவென்று தெரியாமல் செய்கிறர்கள்." சுவாமியார் சந்தோஷத்தோடு அவனை அருகிலழைத்து, "தம்மைச் சிலுவையில்அறைந்து கொன்றவர்களை மன்னித்தாரென்ருல் சிறுபிழைகளை நாம் மன்னிக்கக்கூடாதா?"

"அருள் நீ இந்தமனிதனை மன்னிப்பாயா?"

"ஆம் சுவாமி! யேசுவுக்காக என் மனப்பூர்வமாக மன்னிக்கிறேன்."

"யேசு உன்னை ஆசீர்வதிப்பாராக!"

"ஆமாம்அருள் அந்த இரவுநேரத்தில் ஏன்வந்தாய்?

சுவாமியாருக்குத்தெரியும் அந்த இரவில் எதற்குவந்தானென்று. அருளப்பனையும், படத்தையும் ஒருமுறைபார்த்துவிட்டுப் படத்தைக்கழற்றி அவனிடம் கொடுத்து: "அருள் நீ உன்பகைவனை மன்னித்துவிட்டாய். குழந்தை யேசு உனக்கு மோட்ச பாதையைக் காட்டுவார்."

அருளப்பன் ஆசையோடு படத்தை வாங்கித் தன்நெஞ்சுடன் அணைத்து முத்தமிட்டான். இனிஅவன் தன்சிறு குடிசையில் எவ்வித பக்திவணக்கத்தோடு அலங்காரமாய் வைத்தானென்று சொல்லவும்வேண்டுமா?

டபிள்யூ. ஸ்டிபென்லோவு,
தங்கொட்டுவ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org